# பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 10

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

June 2017

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


பொருளடக்கம்


- மாடுகளைக் கொல்வதற்கு விதிக்கப்பட்ட . . . பக்கம் 1
- மாபெரும் நவம்பர் புரட்சி பக்கம் 3


# மாடுகளைக் கொல்வதற்கு விதிக்கப்பட்ட சமீபத்தியத் தடை

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஈவிரக்கமற்ற முதலாளித்துவ ஒடுக்குமுறையின் நுகத்தடியில் அவதியுற்றுக்கொண்டிருக்கும் பாடுபடும் இந்திய மக்கள் பாஜக தலைமையிலான அரசாங்கமானது மக்களுக்கு அடிப்படை நிவாரணம் அளிப்பதற்கு மாறாக பசுவை பாதுகாப்போம் என வெறிபிடித்து தாண்டவமாடுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். இன்னலுற்றுக்கொண்டிருக்கும் மனித இனத்தைக் காத்திடுவதைவிட பசுக்களைக் காப்பதே தங்களின் புனிதக்கடமை என பாஜகவைச் சார்ந்த அமைச்சர்கள் வெட்கமில்லாமல் அறிவித்து வருகின்றனர். இக்காரணத்தை முன்வைத்து உயர் பதவிகளிலிருக்கும் ஆர்எஸ்எஸ்–பாஜக தலைவர்கள், மாட்டிறைச்சி உண்பதை மையமாக வைத்து சிறுபான்மை முஸ்லீம் இனத்தவருக்கு எதிராகத் தூண்டிவிடும் விதத்தில் விஷத்தை உமிழ்ந்து வருகின்றனர். மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகூட இல்லாதிருக்கையில், நோயுற்றிருக்கும் ஆடு மாடுகளை கால்நடை மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்றிட எண்ணற்ற ஆம்புலன்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ‘இந்தியக் குடியுரிமைக்கு அடையாள அத்தாட்சியாக’ ஆதார் அட்டை இந்திய மக்களுக்கு கட்டாயமாக்கப்பட்டிருப்பதானது பசுக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருப்பது, மனித இனமும் பசுக்களும் ஒரே தர வரிசையில் உள்ளனவா எனும் விசித்திரமான செய்தியை அறிவித்துக்கொண்டிருக்கின்றது.

இந்துத்துவா என்றழைக்கப்படும் இந்த வெறி பிடித்தவர்கள், மாட்டிறைச்சி உண்ணும் ஒரு முஸ்லீம்–ஐ கொலைகாரனென சித்தரிக்கும் அதே நேரத்தில், பசு விலங்குக்கு மனித இனத்திற்கும் மேலான தெய்வத்தன்மைகொண்ட நிலையை வழங்குகின்றனர். இப்படித் தலைகீழாக மாற்றியதன் மூலம், பசு என்பது ஒரு மனிதனாகவும் ஒரு முஸ்லீமானவர் மனிதனல்லாதவாறும் ஆகிவிட்டார். “பூமியில் விழும் பசுவின் ஒவ்வொரு ரத்தத்துளியும் இந்துக்களுக்கு வேதனை தருகிறது” என குஜராத் பாஜக அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது, பசுக்களுக்காக நாங்கள் இருக்கின்றோம் எனக்கூறி அள்ளி வீசப்படும் தெளிவான மதவாதக் கருத்துக்களாகும். இவையனைத்தையும் தொடர்ந்து துன்புறுத்துதல், சித்திரவதை செய்தல் மற்றும் சிறுபான்மை முஸ்லீம்களை கொடூரமாகக் கொலை செய்தல் போன்ற சம்பவங்கள் அபாயகரமான வகையில் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. முஸ்லீம் இனத்தவருக்கெதிரான ஒரு மறைமுகப் போரைத் தொடுத்திட, இந்துத்துவப் படையினர் இப்போது பசுப் பாதுகாவலர்கள் (கௌரக்ஷக்) என்று தங்களைத் தாங்களே கூறிக்கொண்டு ஆயுதமேந்தி அச்சுறுத்திக்கொண்டிருக்கும் குழுக்களை கண்காணிப்பாளர்களாக உருவாக்கி, பசுக் கண்காணிப்பை மீறியதாக அவர்கள் யாரைக் கருதுகின்றார்களோ, அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்திட அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கின்றனர். மத்தியிலும் பல்வேறு மாநிலங்களிலும் பாஜக அரசாங்கங்கள் ஆட்சியிலிருப்பதால், “அதிகாரம் இருப்பதாக உணர்கின்றோம்” என மழைக்காளான்கள் போல் பெருகிவரும் இந்த பசுக்காவலர்கள் கூறுகின்றனர். எனவே, அனைத்து இடங்களிலும் போலீஸ்–நிர்வாகம் என்பது செயலற்றிருப்பது மட்டுமின்றி, அவர்களின் கோழைத்தனமான தாக்குதல்களையும் குறிவைக்கப்பட்டிருக்கும் சமூகங்களைச் சார்ந்தவர்களை அவர்கள் கொலை செய்வதையும் வேடிக்கை பார்ப்பதில் ஈடுபட்டிருக்கின்றது. இது வெறும் மத நம்பிக்கையினால் மட்டும் வழிநடத்தப்பட்டு நடைபெறும் சம்பவங்கள் அல்ல. மதவெறியானது விதைக்கப்பட்டு, திட்டமிட்ட வன்முறைகள் அத்தாக்குதல்கள் அனைத்திலும் அடங்கியிருப்பதனைக் காணலாம்.

அத்துடன், ஏகபோகங்களின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஊடகங்களும் அரசாங்கத்தின் பிரச்சார இயந்திரமும் சில உள்நோக்கம் கொண்ட இந்துத்துவ ஆதரவாளர்களும் “பசுவானது எப்பொழுதுமே புனிதமானதாகவும் இந்துக்களால் மதிக்கபட்டும் வந்திருக்கின்றது” என பொதுமக்கள் மனதில் பதிய வைத்திட ஓர் திட்ட மிட்ட உரத்த தொனியிலான பிரச்சாரத்தை கட்ட விழ்த்து விட்டிருக்கின்றனர். பசுக்களைக் கடத்துகின்றனர், பசுக்களை இறைச்சிக்காக கொல்கின்றனர் மற்றும் மாட்டிறைச்சியை உண்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களைக்கூறி பிரச்சாரத்தை எவ்வளவு தீவிரப்படுத்துகின்றனரோ அந்த அளவிற்கு முஸ்லீம்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. இது முஸ்லீம்கள் மீது மட்டும் நடைபெறுவதில்லை. இறந்த பசுக்களைக் கொண்டுசெல்லுதல், அகற்றுதல், இறந்த கால்நடைகளின் தோலை உரித்தல் உள்ளிட்ட இழிவான வேலைகள் என அழைக்கப்படுகின்ற வேலைகளைச் செய்து தங்களின் பிழைப்பை எப்படியோ நடத்திக் கொண்டிருக்கும் இந்து மதத்தைச் சார்ந்த தலித் மக்களும்கூட விட்டுவைக்கப்படவில்லை. பசுப் பாதுகாவலர்கள் என அழைக்கப்படுபவர்களால் பொது மக்கள் முன்பாக இவர்களும் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் வருகின்றனர்.

### பசுக் கண்காணிப்பை நியாயப்படுத்தும் நிர்வாக உத்தரவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது

நிலைமையை இன்னும் மோசமாக்கும் விதத்தில் பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம், பசுக் கண்காணிப்பை நியாயப்படுத்தும் ‘மிருகவதைத் தடுப்பு (கால்நடைச் சந்தையை ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2017’ (Prevention of Cruelty to Animals (Regulation of Livestock Markets) Rules, 2017) என்ற தலைப்பிட்ட நிர்வாக உத்தரவினை இப்போது பிறப்பித்துள்ளது. சமீபத்தில் வந்திருக்கும் நடைமுறையாக, ஆளும் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் அதனை அண்டி வாழ்பவர்களின் இறையாண்மையாக உணரப்பட்டு பாராளுமன்றத்தைப் புறக்கணித்து விட்டு இந்த உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்க உத்தரவானது, கால்நடைச் சந்தைகளில் மற்றும் விலங்குகள் கண்காட்சிகளில் மாட்டிறைச்சிக்காக கால்நடைகள் விற்கப்படுவதையும் அல்லது மத ரீதியில் உயிர்ப்பலி கொடுப்பதையும் தடை செய்கிறது. இந்த நிர்வாக உத்தரவானது, மாட்டிறைச்சிக்காக பசுவைக் கொல்வதற்கும், எதனை உண்ண வேண்டும் என மக்களை நிர்ப்பந்திப்பதற்கு ஒப்பாகும். இது மக்களின் உண்ணும் உரிமையை அப்பட்டமாக காலில் போட்டு மிதிப்பதாகும். எவ்வகையில் பார்த்தாலும், இது எதேச்சதிகாரத்தன்மை கொண்டதாகும். எந்த அறிவுள்ள மனிதனும் இதனை பைத்தியக்காரத்தனத்தின் உச்சம் அல்லது திட்ட மிட்ட அநீதி என்றே அழைப்பான். இத்தகைய நிர்வாக உத்தரவின் விளைவு என்னவாக இருக்கும், இதில் மறைந்திருக்கும் திட்டம் என்ன? இதில் மதம் ஏதும் சம்மந்தப்பட்டிருக்கின்றதா அல்லது இதில் வேறு விஷயம் ஏதும் இருக்கின்றதா? ஜனநாயக எண்ணம் கொண்ட சிந்திக்கும் மக்கள் ஆழமாக ஆராய்ந்து உண்மையைக் கண்டறிய வேண்டியுள்ளது.

### பசுப்பாதுகாவலர்களின் செயல்பாடுகளை நியாயப்படுத்திடக் கூறப்படும் அடுக்கடுக்கான பொய்கள்

ஆர்எஸ்எஸ்–பாஜக–சங்கப்பரிவாரம் ஆகியன பசுவை புகழ்பாடிட நீண்ட காலமாகவே அடுக்கடுக்கான பொய்களைக் கூறுவதிலும், தவறான வாதங்களை முன்வைப்பதிலும் ஈடுபட்டு வருவது ஆய்ந்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## மாடுகளை இறைச்சிக்காக சந்தையில் விற்பதை தடைசெய்யும் மக்கள் விரோத சட்டத்தை எதிர்த்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆர்ப்பாட்டம்




சென்னையில் ஜூன் 5, 2017 அன்று மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர் ரெங்கசாமி, மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்

## மாடுகளைக் கொல்வதற்கு விதிக்கப்பட்ட சமீபத்தியத் தடை

# அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சட்டத்தைக் கையிலெடுக்கும் பசுக் காப்பாளர்களுக்கு ஆதரவாக உள்ளது

1ம் பக்கத் தொடர்ச்சி

தறியக்கூடிய எந்த மனிதனின் பார்வையிலிருந்தும் தப்பித்திடவில்லை. எழுத்து வடிவில் விமரிசிப்பது இருக்கட்டும், பேசுவதற்குக்கூட ஒருவர் வெட்கப் படக்கூடியதாக இருக்கின்ற இத்தகைய வாதங்கள் யாவும் போலியானதாகவும் நகைப்புக்குரியதாகவும் இருக்கின்றன. மூச்சு விடுகையில் பசு பிராண வாயுவை (ஆக்சிஜன்) வெளியிடுகின்றது, பசுவின் சிறுநீரைக் குடிப்பது மற்றும் பசுவின் சாணத்தை உண்பது வயது முதிர்ந்த காலத்திலும்கூட ஒருவரை ஆரோக்கியமாக வைத்திருக்கும் மற்றும் கருத்தரித் திருக்கும் எந்த பெண்ணுக்கும் சுகப்பிரசவத்தை உத்திரவாதப்படுத்தும், புற்றுநோய் உள்ளிட்ட பல கொடிய வியாதிகளை பசுவின் சாணம் குணப்படுத் திடும், பசுவின் சாணத்திற்கு ஆபத்தான கதிரியக்க வீச்சினை ஈர்த்துக்கொள்ளும் சக்தி உள்ளது போன்ற இன்னும் பல அவர்களின் வாதங்களாகும். எந்த சிந்திக்கும் மற்றும் அறிவுள்ள மனிதனும் இத்தகைய குப்பைகளை ஏற்றுக்கொள்வானா? ஆர்எஸ்எஸ்ஸும் அதனைச் சார்ந்த அமைப்புகளும் இன்னும் ஓரடி மேலே சென்று, இது போன்ற 'அதிசயிக்கத்தக்க' சக்தியானது நம் நாட்டு பசுக்களுக்கு மட்டுமே உள்ளதென்றும் அத்தகைய சக்தியானது அயல் நாட்டுப் பசுக்களுக்குக் கிடையா தென்றும், அயல்நாட்டுப்பசுக்கள் தரும் பாலும் சாணமும் விஷத்தன்மைகொண்டதென்றும் கூறுகின்றன. உண்மையில் ஆச்சரியம்தான்! இப்போது சங்கப்பரிவாரத்தின் ஒரு பிரிவான விஸ்வ இந்து பரிஷத்தானது (VHP-விஹெச்பி) சுதேசி, அதாவது முழுக்க முழுக்க உள்நாட்டுக் கால்நடைகளின் சாணத்தையும் சிறுநீரையும் கொண்டு தயாரிக்கப்படும் சோப்புகள் மற்றும் மருந்துகளை 'காமதேனு' என்ற ஓர் முத்திரையுடன் தயாரித்துவருகின்றது. இது, கண்மூடித்தனமான விசுவாசம் மற்றும் குருட்டுத்தனமான நம்பிக்கை களை எப்படித் தூண்டிவிடுவது, மக்களின் அறியா மையைப் பயன்படுத்தி பொய்யான வாதங்களை முன்வைத்து அதே சமயம் வணிக நன்மைகளை எவ்வாறு வெற்றிகரமாக அறுவடை செய்வது என்பதற்கான சிறந்த உதாரணமாகும். இப்பின்னணியில்தான் இந்த உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஜனநாயக உள்ளடக்கம் கொண்ட எந்த அரசாங்கமும் இதற்கு எதிராக அதிகரித்து வரும் எதிர்ப்பின் நியாயத்தன்மைக்கு மதிப்பளித்து அத்தகைய உத்தரவை திரும்பப் பெற்றிருக்கும். ஆனால் ஆர்எஸ்எஸ்–பாஜக மற்றும் அவைகளின் அரசாங்கமானது, அதற்குப்பதிலாக அத்தகைய அப்பட்டமான பொய்களை மூடி மறைப்பதற்கான வெற்று வாதங்களை மும்முரமாக ஒன்று சேர்த்து வழங்கிக்கொண்டு, பசுக் கண்காணிப்பு எனும் அவர்களின் மறைமுகத் திட்டத்தையும் மற்றும் கெடு நோக்கம் கொண்ட எதேச்சதிகார நிர்வாக ஆணை யையும் மூடி மறைப்பதில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கால்நடைச் சந்தையை ஒழுங்குமுறைப் படுத்துகிறோம் என்ற அவர்களின் அலங்காரமான வாதத்திறமையையும், மிருகவதையை முடிவிற்குக் கொண்டுவருகின்றோம் என்பதையும் ஏற்பாரில்லை. மாறாக, பசியினாலும் ஊட்டச்சத்துக் குறைவினாலும் மக்கள் மடிந்துகொண்டிருக்கையில் யதார்த்த உண்மைக்கு நன்கு பரிச்சயம் ஆனவர்கள் அத்தகைய வாதங்களைக்கண்டு எள்ளி நகையாடுவதுடன் பசுவிற்கு 'சிறப்பு குடியுரிமை' தகுதி கட்டாயமாக்கப் பட்டதைக் கண்டு ஏளனம் செய்து வசைபாடத் தூண்டப்பட்டனர். தான் விரித்த வலையிலேயே சிக்கிக்கொண்ட அரசாங்கமானது, இத்தகைய உத்தரவு மாட்டிறைச்சிக்கு எந்த தடையும் விதிக்க வில்லை என மக்களுக்கு உறுதியளிக்க இப்போது கரகரத்த குரலில் பேசிவருகின்றது. மாட்டிறைச்சியை உட்கொண்டார் எனும் பொய்யான குற்றச்சாட்டின் அடிப்படையில் அப்பாவி குடிமக்கள் கொல்லப் படுவதையும் தாக்கப்படுவதையும் காணும் பகுத்தறிவுள்ள நாட்டு மக்கள் அவர்கள் ஒவ்வொன்றாகக் கூறிவரும் அப்பட்டமான பொய்யை ஏற்றுக்கொள்ளவில்லை.

### துயரத்திலிருக்கும் விவசாயிகளுக்கு இது பாதகமான பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது

அடுத்ததாக, ஏழை மக்களின், குறிப்பாக வறுமையில் வாடும், அரைகுறை ஆடையில் அரை வயிற்றுக் கஞ்சி குடித்துக்கொண்டிருக்கும் விவசாயி களின் பொருளாதார வாழ்வில் இத்தகைய எதேச் சதிகாரமிக்க உத்தரவு ஏற்படுத்தப்போகும் மிகப் பாதகமான பொருளாதாரத் தாக்கம் எனும் கேள்வி யாகும். வீட்டு விலங்குகள் யாவும் காலங்காலமாக நிலையான சொத்துக்களாக கருதப்பட்டு, உயிர்வாழ் வதற்கும் வாழ்க்கையை நடத்துவதற்கும் அவைகள் உதவிகரமாக இருப்பதினால், கால்நடை வளர்ப்பு என்பது நன்கறிந்த வீட்டு நடைமுறையாக ஆகிவிட்டது. பசு உள்ளிட்ட பழக்கிவைக்கப்பட்ட விலங்குகள் யாவும் ஏர் உழுவதற்கு, எண்ணெய்ச் செக்கு இழுப்பதற்கு, வண்டியிழுப்பதற்கு மற்றும் பிற பயன்பாடுகளுக்கு உதவுவது மட்டுமின்றி, அபரிமிதமாக இருக்கையில் அவை உணவாகவும் பயன்பட்டன. இதிகாசங்கள் உள்ளிட்ட பண்டைய இலக்கியங்கள் இதற்கு சான்று பகர்கின்றன. பண்டைய இந்தியாவில் இந்துக்கள் மாட்டிறைச்சி உட்கொண்டனர் என்பதை மத நூல்களும் பழங்கால எழுத்துக்களும் காண்பிக்கின்றன என டாக்டர் டி என் ஜா என்பவர் தனது 'புனிதமான பசு எனும் கட்டுக்கதை' என்ற பிரசித்தி பெற்ற படைப்பில் குறிப்பிட்டுள்ளார். இது, இஸ்லாம் வந்தபின்னரே இந்தியாவில் மாட்டிறைச்சி உண்பது வந்தது என ஆர்எஸ்எஸ்–பாஜக-இந்துத்துவ கூடாரம் உறுதிபடக் கூறுவதற்கு எதிராக நின்றதால் அந்த நூல் வெளி யிடப்பட்ட பின்னர் டாக்டர் ஜா மிரட்டப்பட்டார்.

இன்றைய நிலைமைக்கு வருவோம். கால்நடை களின் வாழ்க்கைச் சுழற்சியானது, விவசாயிகளுக்கு ஒரு கணிசமான பொருளாதார மாதிரியை வழங்கு கின்றது. பெரும்பாலான விவசாயிகள் 8–9 வயதிற்கும் மேற்பட்ட கால்நடைகளை வைத்திருப்பதில்லை. மேலும் கால்நடைகளின் விலை கணிசமாக உயர்ந் திருப்பது, பசு உற்பத்தி வீழ்ந்து வருவதினால் விநியோகத்தைவிட கால்நடைகளின் தேவை அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டிக்கொண்டி ருக்கின்றது. கூடவே கால்நடைத்தீவனம் மற்றும் கால்நடைகளைப் பராமரித்திட அவசியமாயிருக் கின்ற பிற கருவிகளின் விலைகள் மிகவும் அதிகரித்துவிட்டன. மேலும், காளைகள் செய்யும் இனப்பெருக்கப் பணியை செயற்கைக் கருத்தரிப்பு செய்துகொண்டிருக்கின்றது. எனவே விவசாயிகள், பயனற்று இருக்கக்கூடிய கால்நடைகளை விற்கவும் விற்ற பணத்தைக்கொண்டு புதிதாக வாங்குகின்ற ஒரு கால்நடையின் விலைக்கு ஈடுகட்டுகின்றனர். இந்த விருப்பத்தெரிவு விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டால், தனது வாழ்வாதாரத்தையே நிர்வகிக்க முடியாமலிருக்கும் அவர்களால் அந்த பயனற்று இருக்கின்ற கால்நடைகளை எவ்வாறு பராமரித்திட இயலும்? மேலும், இக்கட்டான சூழ்நிலைமையில் கால்நடைகளை விற்பது ஒரு முக்கியமான விருப்பத்தெரிவாக இருப்பதால் அதன் மூலம் விவசாயிகள் தங்களின் பணக் கஷ்டங்களை ஓரளவிற்கேனும் சமாளித்திட முடிகின்றது. அந்த வாய்ப்பும்கூட பறிக்கப்பட்டுவிட்டால் விவசாயிகள் நிச்சயம் கடன் சுமையில் மேலும் தள்ளப்படுவார்கள். ஒருவர் வாங்கிய தேதியிலிருந்து ஆறு மாதங்கள் வரையில் கால்நடைகளை விற்கவோ அல்லது ஊனமுற்ற கால்நடைகளை விற்கவோ முடியாது என இப்புதிய உத்தரவு நிர்ணயிக்கின்றது. வறட்சி போன்ற சூழ்நிலைமைகளில் விவசாயிகளின் துயரங்களை இது மேலும் தீவிரப்படுத்தும். ஒரு விலங்கு விற்பனைக்கு தகுதியற்றதென ஒரு கால்நடை மருத்துவரால் கூறப்பட்டால் இப்புதிய சட்டத்தின்படி அவ்விலங்கினை பறிமுதல் செய்து தனி வேலிகளில் அடைத்திடும் அதிகாரம் அதிகாரி களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவும்கூட துயரத்தி லிருக்கும் விவசாயிகளுக்கு மற்றுமொரு அடியாகும்.

இவ்வாறாக, பசு உற்பத்தியும் கூட கடுமையாக பாதிப்புக்குள்ளாகி அதலபாதாளத்திற்குச் சரிந்து விடும். பெருமளவிலான துயுறற்றிருக்கும் மக்கட் பகுதியினர் எப்படியாவது இந்த ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறை முதலாளித்துவ ஆட்சியில் உயிர் வாழ்ந்துவிடலாம் எனப் போராடிக்கொண்டிருக் கையில், விவசாயிகள் தற்கொலை 3.5 லட்சத்தையும் தாண்டியிருக்கையில், விளிம்பு நிலைக்கு தள்ளப் படுவது மற்றும் ஓட்டாண்டிகளாக்கப்படுவது விவசாயிகளின் வாழ்வில் அழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கையில், மனித அம்சத்தை சிறிதள வேனும் பெற்றிருக்கின்ற எவராவது எஞ்சியிருக்கும் வாழ்வாதாரத்தை அவர்களிடமிருந்து பறித்திட எண்ணுவார்களா? அது மாண்டுகொண்டிருப் பவனை மேலும் வதம் செய்வதற்கு ஒப்பாகாதா? 'பசுவதை'யைத் தடுக்கிறோம் என்ற பெயரில் இத்தகைய உத்தரவானது விவசாயிகளை இன்னும் அதிகமாக வதைப்பது என்றாகாதா?

இது போலவே, இந்த உத்தரவானது எண்ணற்ற மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கிக்கொண்டி ருக்கும் 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பு வாய்ந்த இறைச்சி மற்றும் அது சார்ந்த இந்திய தொழிற் சாலைகள் மீது அபாயகர தாக்கத்தை ஏற்படுத்தும். வெட்டப்படும் கால்நடைகளில் பெரும்பாலானவை நீர் எருமை மற்றும் இந்திய எருமைகள் ஆகும். இறைச்சித் தொழிற்சாலை வருடந்தோறும் 28,000 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட ஏற்றுமதியை செய்வதுடன் பதனிடப்படாத 38,500 கோடி ரூபாய் மதிப்புள்ள தோலை தோல் தொழிற்சலைகளுக்கு விநியோகிக்கின்றது. இத்தொழிற்சாலைகளின் 90% தேவையானது விலங்குகள் சந்தை விநியோகத்தை நம்பியிருக்கின்றது. இப்புதிய உத்தரவினால் ஆலை களுக்கான அத்தகைய விநியோகம் சுருங்கிப் போனதால், மக்களின் ஒரு பெரும் பகுதியினர் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து ஏற்கனவே அதிகரித்திருக்கும் வேலையற்றோர் பட்டாளத்தில் இணைந்து கொள்வர். பசுவைப் பாதுகாத்திட மனிதர் களை உயிர்வாழ முடியாதவாறு துரத்தியடித்திட வேண்டும் என்பதில் என்ன பொருளாதாரத் தர்க்கம் இருந்திட முடியும்? மாறாக, இடைக்காலத்தை, அதாவது அடக்குமுறை ரோமானிய பேரரசர்கள் சங்கிலியால் கட்டப்பட்ட அடிமைகள் மீது கொடிய விலங்குகளை அவிழ்த்துவிட்டு அதில் கொடூர ஆனந்தம் கண்டதை நினைவுபடுத்தும் வகையில் பசுப் பாதுகாப்பு பீடத்தில் மனிதர்களை பலி கொடுக்கும் இந்த செயல் ஒரு அப்பட்டமான உதாரணமாக உள்ளது. பசுப் பாதுகாப்பை ஆதரித்து வாதிடுபவர்கள் மக்கள் இதனைப் புரிந்துகொள்ளாத முட்டாள்களாக உள்ளனர் என எண்ணுகின்றனரா? மற்றொருபுறம், இது மாட்டிறைச்சி கறுப்புச்சந்தை வளர்வதற்கும், பசு தொடர்புடைய தொழிற் சாலைகள் பிற மூலப்பொருள் ஆதாரங்களை சுரண்டுவதற்கும் வழிவகுக்காதா? அத்துடன், பெரும் பன்னாட்டு நிறுவனங்கள், கார்ப்பொரேட் பெரும் முதலைகள் மற்றும் சில்லரை வர்த்தக பெரும் நிறுவனங்கள் இவ்வியாபாரத்தில் கொள்ளையடித்திட வழிவகுத்திடாதா?

### மதம் இதனை ஆதரிக்கிறதா?

இவ்வாறாக, இப்புதிய உத்தரவானது, ஏற்கனவே பேரழிவிலிருக்கும் அடித்தட்டு மக்களின் வாழ்க் கையை எவ்வாறு மேலும் பேரழிவிற்குள்ளாக்கும் என்பது தெளிவாகின்றது. இது மதத்தின் பெயரில் செய்யப்படுகின்றது. பசு என்பது 'புனிதமானது' என கருதப்பட்டு அதனால் அது 'தாயாக வணங்கப் படும்' என்கின்ற இந்து மதத்தை பின்பற்றும் பெரும் பான்மை இந்தியர்களின் உணர்வைப் புரிந்து கொண்டு இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என ஆட்சியாளர்கள் வாதிடுகின்றனர். சமூக வரலாற்றுக் கண்ணோட்டத்தின் பார்வையில் இது ஏற்றுக்கொள்ளக்கூடியதா? சரித்திரத்தின் அறிவியல் ஆய்வு மற்றும் சமூக வளர்ச்சியானது, மதம் என்பது கடவுள் பற்றிய கோட்பாடு தோன்றியது போலவே வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அந்நேரத்தின் ஒரு குறிப்பிட்ட சமூகத் தேவையை முன்னிட்டு தோன்றியது என காண்பிக்கின்றது. மதமானது, சமூகத்திற்கான ஒரு அறநெறி மற்றும் ஒழுக்கநெறி கட்டமைப்பை வழங்கிடுவதற்குப் பயன்பட்டது. 'எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது' என்பதை குறிப்பிட்டு அனைத்தையும் தழுவிய கோட்பாட்டு வடிவத்தைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு மத போதகர்களும் தத்தம் தர்க்கத்தின் அடிப்படையில் தங்களின் கண்ணோட்டத்தை

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# சுரண்டலற்ற சமூகத்திற்காகப் போராடிட வழிக்காட்டிக்கொண்டிருக்கின்றது

*[உலகின் முதல் சோசலிச அரசான சோவியத் யூனியன் உருவாவதற்கு அடித்தளமிட்ட வரலாற்று சிறப்பு மிக்க நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு கொண்டாட்டங்களையொட்டி எமது ஆங்கில ஏடான புரோலிடேரியன் எராவானது (Proletarian Era), மனித இன வரலாற்றில் சகாப்தம் படைத்த இந்த நிகழ்வு குறித்த பல்வேறு கட்டுரைகளை வெளியிட முடிவு செய்துள்ளது. இங்கே, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் லெனின் அவர்கள் தலைமையில் போல்ஷ்விக் கட்சி நிறுவப்பட்டு, புரட்சிக்கான தயாரிப்பு வேலைகள் மேற்கொண்டதன் போக்கு குறித்த கட்டுரைகளை மார்ச் 15, 2017 பதிப்பிலிருந்து தொடர்ச்சியாக வெளியிட நாங்கள் துவங்கியிருக்கின்றோம். அக்கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து பாட்டாளி சிந்தனையில் தொடர்ச்சியாக இங்கே பிரசுரிக்கிறோம்]*

*[பாட்டாளி சிந்தனை, தொகுதி 27, எண்: 9யின் தொடர்ச்சி]*

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது மற்றும் பாராளுமன்ற இயக்கங்களை பாராளுமன்ற இயக்கங்களுக்கு அப்பாற்பட்ட இயக்கங்களுடன் ஒருங்கிணைப்பது என்ற கேள்வியில் இன்று குழப்பங்கள் நிலவுகின்றன. இப்பிரச்சினையில் லெனின் அவர்களது மதிப்புவாய்ந்த போதனைகள் இன்னும் வழிகாட்டுதலைத் தருகின்றது. நாடு முழுவதிலும் புரட்சிகர இயக்கங்கள் பரவாத வரையில், பூர்ஷ்வா அரசியலைப்பற்றி ஆழமாகப் பதிந்துள்ள மாயையிலிருந்து மக்களை விடுவிக்காத வரையில், பாராளுமன்றக் களத்தினுள் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட இயக்கங்களின் குரலை பிரதிபலிக்கச்செய்வதின் அவசியம் இருந்து கொண்டேதான் இருக்கும். பூர்ஷ்வா பாராளுமன்றம் மக்கள் விடுதலைக்கான வழியைக் காட்ட முடியாது என்ற உண்மையை தெரிந்து கொள்ள வேண்டியது மக்களுக்கு அவசியமாயிருக்கின்றது. பாராளுமன்ற அமைப்புமுறை வீண் என்பது முற்றிலுமாக அம்பலமாகிய நிலையில் புரட்சிகர சித்தாந்தத்தை மக்கள் உள்வாங்குகையில், மக்கள் எழுச்சிக்கு தயாராகி விடுவார்கள். பின்னர், பூர்ஷ்வா பாராளுமன்றத் தேர்தலில் பங்கெடுக்கும் தேவையென்பது இல்லாமற் போய்விடும். பாராளுமன்றத்தைப் புறக்கணிக்கும் தருணமானது அப்போதுதான் ஏற்படும்.

மாறிய சூழ்நிலைமையில், புரட்சிகரப் போராட்டங்கள் பின்னடைவைச் சந்தித்தபோது, புரட்சியின் நலனைக் கருதி பாராளுமன்றத்தை ஒரு மேடையாகப் பயன்படுத்திட போல்ஷ்விக்குகள் இரண்டாம் டூமா (ரஷ்ய பாராளுமன்றம்)வில் பங்கெடுப்பதென முடிவெடுத்தனர். மென்ஷ்விக்குகளும் பாராளுமன்றத்தில் பங்கெடுக்க முடிவு செய்தனர். ஆனால் அவர்களின் முடிவானது, அரசியலமைப்பு ஆதரவு ஜனநாயகவாதிகள் (புரட்சிக்கு எதிரான ஓர் கட்சி) போன்ற சக்திகளுடன் தேர்தலில் கைகோர்த்து நிற்பதாகவே இருந்தது. அது, ஜார் ஆட்சியின் கொடிய திட்டத்திற்கு உதவி புரியும் வகையில் டூமாவை ஆக்குவதாகவும் வெகுஜன இயக்கங்களில் மக்களை அடக்கிவைப்பதாகவும் அமைந்தது. கட்சியின் மத்தியக் கமிட்டியில் மென்ஷிவிக்குகள் பெரும்பான்மையைக் கொண்டிருந்ததினால், கொள்கை முடிவுகள் அவர்களுக்குச் சாதகமாகவே அமைந்திட ஏதுவாக இருந்தது. இத்தகைய சமரசத் தன்மை கொண்ட பாதையிலிருந்து உழைக்கும் வர்க்கத்தையும் வெகுஜன இயக்கங்களையும் பாதுகாத்திடவேண்டி, கட்சி மாநாட்டை கூட்டவேண்டுமென்ற கோரிக்கையை போல்ஷ்விக்குகள் முன்வைத்தனர். கட்சியின் ஐந்தாவது மாநாடு லண்டனில் 1907ஆம் வருடம் மே மாதம் நடைபெற்றது. அங்கே, ஒரு இடைநிலைவாத குழுவினை (சென்ட்ரிஸ்ட் குரூப்) அமைத்திடும் ட்ராட்ஸ்கியின் முயற்சியானது தோல்வியில் முடிந்தது. கட்சியானது இனிமேல், அரசியலமைப்பு ஜனநாயகவாதிகளான அனைத்து பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வா சக்திகள், சோசலிசப் புரட்சியாளர்கள், மக்களின் சோசலிசவாதிகள் மற்றும் இன்னும் பிறருக்கு எதிரான சித்தாந்தப் போராட்டங்களை நடத்தும் என காங்கிரஸ் முடிவெடுத்தது. போல்ஷ்விக்குகளின் வெற்றியை சுட்டிக்காட்டி ஸ்டாலின் அவர்கள், "அனைத்து இரஷ்ய முன்னேறிய உழைப்பாளர்களை புரட்சிகர சோசலிச ஜனநாயக பதாகைக்குள் ஒரே அனைத்து இரஷ்ய கட்சியாக உண்மையில் ஒன்றிணைப்பதுதான் – லண்டன் மாநாட்டின் முக்கியத்துவம் . ." என எழுதினார். அம்மாநாடு நடந்து முடிந்த உடனேயே, ஜார் அரசாங்கம் இரண்டாவது டூமாவை கலைத்துவிட்டு பரந்த அளவிலான கைது நடவடிக்கையை துவக்கியது. 1907 டிசம்பரில் லெனின் அவர்கள் கைது நடவடிக்கையிலிருந்து எப்படியோ தப்பித்து வெளிநாடு சென்றுவிட்டார்.

### ஸ்டோலிபின் (Stolypin)–ன் பிற்போக்கு நாட்கள்

1908லிருந்து 1912 வரை இரஷ்ய புரட்சியாளர்களுக்கு மிகவும் கடினமான நேரமாக இருந்தது. ஜார் அரசாட்சியின் கீழிருந்த ஸ்டோலிபின் என்ற ஒரு மந்திரி ஆயிரக்கணக்கான புரட்சியாளர்களை தூக்குமேடைக்கு அனுப்பினார். இதனால், அக்காலகட்டமானது 'ஸ்டோலிபின் பிற்போக்கு' நாட்களென குறிப்பிடப்படுகின்றது. 1908லிருந்து 1912 வரையிலான இக்காலகட்டத்தின்போது, சட்டவிரோதமான கட்சி அமைப்புகளை பாதுகாத்திடவும் கட்சியை முடிந்த வரை பலப்படுத்திடவும் சட்டரீதியிலான வழிமுறைகளை போல்ஷ்விக்குகள் பயன்படுத்தினர். லெனினது வார்த்தைகளில் கூறுவதானால், கட்சியானது ஜார் ஆட்சிக்கு எதிரான, வெளிப்படையான புரட்சிகரப் போராட்ட முறையிலிருந்து ஒவ்வொரு சட்ட வழிமுறைகளையும் பயன்படுத்திட முயற்சித்துக்கொண்டிருக்கும் மறைமுகப் போராட்ட முறைக்கு மாறியது. மென்ஷ்விக்குகள் ஒட்டுமொத்தமாக போராட்ட களத்திலிருந்து வெளியேறிவிட்டனர். இன்று இருக்கின்ற மாறிய சூழ்நிலைமையில் மார்க்சிசம் திருத்தியமைக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது என அறிவுஜீவிகள் கூறுவது ஒரு புதுப்பாணியாக இருந்தது. போக்டனோவ், லுனாசாஸ்க்கி மற்றும் பிறர், மேம்படுத்துகின்றோம் என்ற பெயரில் உன்னத சித்தாந்தமான மார்க்சிசத்தின் பலமான சித்தாந்த அடிப்படையை நீர்த்துப்போக வைத்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்கெதிரான போரை தொடுப்பதற்குப் பதிலாக, பிளக்கனோவ் உள்ளிட்ட மென்ஷ்விக்குகள் போராட்டக் களத்தைவிட்டு வெளியேறிவிட்டனர். இத்தகைய தாக்குதலுக்கு எதிரான ஒரு போரை தொடுத்து, அதன்மூலம் மார்க்சிச உணர்வை வளர்த்தெடுத்திட வேண்டிய நிர்ப்பந்தமானது லெனின் அவர்களுக்கு ஏற்பட்டது. கிட்டத்தட்ட இதே நேரத்தில்தான் லெனின் அவர்கள் தனது பிரசித்தி வாய்ந்த 'பொருள்முதல்வாதமும் பேரரசு விமர்சனமும்' என்ற (Materialism and Empirio-Criticism) ஆய்வுக்கட்டுரையை எழுதினார். அவர், மேக் மற்றும் அவனேரியஸ் ஆகியோரின் கருத்து முதல்வாத சிந்தனைக்கெதிரான போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினார்.

புரட்சிகர ஓட்டத்தின் போக்கில் எங்ஙனம் முன்னேறிச்சென்றிட வேண்டும் என்பதையும் பிற்போக்காளர்களின் கைகள் ஓங்கி பின்னடைவு ஏற்படும் காலத்தின்போது எங்ஙனம் சரியாக பின்வாங்கிச் சென்று சட்டத்தின் மூலம் அங்கு குறைந்த அளவே இருக்கின்ற வாய்ப்பினை முடிந்த வரையில் பயன்படுத்திக்கொண்டு சட்டத்திற்கு புறம்பான கட்சியை எங்ஙனம் பாதுகாத்து பலப்படுத்துவது என்பதையும் அதே நேரத்தில் வெகுஜனங்களுடன் உள்ள தொடர்புகளை பலப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதனையும்கூட கம்யூனிஸ்டுகள் தெரிந்துவைத்திருக்க வேண்டும் என்பதை லெனின் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். அவர் மேலும் கூறுகையில், "போல்ஷ்விக்குகள் தங்களது "படைக்கு" குறைவான இழப்புடன், அதன் மையக்கருவை சிறந்தமுறையில் பாதுகாத்து, மிகவும் ஒழுங்குமுறையுடன்கூடிய பின்வாங்குதலை மேற்கொண்டார்கள்.... ஒருவர் பின்வாங்க வேண்டும், எங்ஙனம் பின்வாங்க வேண்டும், மிகவும் பிற்போக்கான பாராளுமன்றங்கள், மிகவும் பிற்போக்கான தொழிற்சங்கங்கள், கூட்டுறவு, காப்பீட்டு சொசைடிகள் மற்றும் அதுபோன்ற அமைப்புக்களில் சட்டரீதியாக எவ்வாறு வேலை செய்வது என்பதை முழுமையாகக் கற்க விரும்பாத, புரட்சிகர சொற்றொடர்களை பேசித்திரிபவர்களை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி, வெளியேற்றியதன் மூலமே போல்ஷ்விக்குகள் இதை சாதித்தனர்" என்றார். (இடதுசாரி கம்யூனிசம் ஓர் இளம்பருவக் கோளாறு – பக்கம் 16) இத்தகைய சூழ்நிலைமையில் ஒரு புரட்சிகரக் கட்சியானது அதன் அறிவையும் புரிதலையும் கூர்மைப்படுத்திக்கொண்டாக வேண்டும்.

இதனை மென்ஷ்விக்குகள் கைக்கொள்ள தவறியபோதும், லெனின் தலைமையிலான போல்ஷ்விக்குகள் ஒருசில ஆண்டுகளில் புரட்சிகர இயக்கத்தின் அலையானது மீண்டும் வீசத்துவங்கும் என்பதையும் அப்புதிய எழுச்சியில் பங்கெடுப்பதற்காக மக்களை தயார்படுத்திடும் பொறுப்பானது கட்சிக்கு உள்ளது என்பதையும் நிச்சயம் அறிந்திருந்தார்கள். "எக்காரணத்தைக் கொண்டும் புரட்சியை ஒரு ஒற்றை நடவடிக்கையாகக் கருதிடக்கூடாது, மாறாக அது ஒரு தொடர்ச்சியான சக்திவாய்ந்த திடீர்க் கிளர்ச்சிகளாகவும் விரைவாக மாறிமாறி வரும் கிட்டத்தட்ட முழுமையான அமைதியைக் கொண்ட, காலங்களாகவும் கருதிட வேண்டும். இக்காரணத்தினால்தான், நமது கட்சி அமைப்பு நடவடிக்கையின் பிரதான உள்ளடக்கம், இத்தகைய செயல்பாட்டின் குவிமையம் என்பது, மிகவும் சக்திவாய்ந்த கிளர்ச்சிகளின்போதும் முழுமையான அமைதி நிலவும்காலத்திலும்கூட முடிந்த அளவிலும் அத்தியாவசியமாகவும் பணியாற்றிட வேண்டும் என்பதாகும்." (தொகுப்பு நூல்கள் தொகுதி 5, பக்கம் 514)

புரட்சி துவங்கியபின்பு புரட்சியாளராக மாறும் ஒருவர் ஒரு உண்மையான புரட்சியாளர் இல்லை என்பதையும், உண்மையில் பிற்போக்காளர்கள் கடும் தாக்குதல்களை தொடுத்துக்கொண்டிருக்கும் வேளையில், தாராளவாதிகளும் ஜனநாயகவாதிகளும் கடும் ஊசலாட்டத்திலிருக்கும் வேளையில், எவரொருவர் புரட்சிக் கோட்பாடு மற்றும் கோஷங்களுடன் தொடர்ந்துகொண்டிருக்கின்றாரோ, அவரே ஒரு உண்மையான புரட்சியாளர் என்பதையும் லெனின் சுட்டிக்காண்பித்தார். ஒரு புரட்சிகர வழியில் எங்ஙனம் போராட்டங்களை நடத்துவது என்ற படிப்பினையை வெகுஜனங்களுக்கு வழங்கிட முடிந்த ஒருவரே ஒரு உண்மையான புரட்சியாளர் என்பதையும் லெனின் சுட்டிக்காண்பித்தார். அத்தகைய படிப்பினைகளின் விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதை எவரும் அனுமானித்திட முடியாது. "புரட்சியின் அடுத்த அலை நாளை, நாளை மறுநாள் அல்லது சில மாதங்களுக்குப் பின்னர் வீசுமா என்பது எண்ணற்ற அனுமானிக்க முடியாத சூழ்நிலைமைகளைச் சார்ந்தே இருக்கின்றது. . . " (தொகுப்பு நூல்கள்: தொகுதி 8, பக்கம் 139) "மக்களின் புரட்சியானது, முன்கூட்டியே திட்டமிட்டமைத்திட முடியாது . . . ஓர் எழுச்சியை தயார்படுத்துபவர்கள் வெகுஜனங்களிடையே செல்வாக்கு பெற்றிருந்தால், சூழ்நிலைமைகளை சரியாக யூகிக்கமுடிந்தால் ஓர் எழுச்சியினை உறுதிப்படுத்திடலாம்." (தொகுப்பு நூல்கள்: தொகுதி 8, பக்கம் 153)

இதுகுறித்து லெனின் அவர்களது மற்றுமொரு படிப்பினையை நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்: "புரட்சிக்கான பொருத்தமான தருணத்தின் அம்சங்கள் எவைகளென பொதுவாகப் பேசுகையில், கீழ்க்கண்ட அம்சங்களுக்கு நாம் அழுத்தம் தருவதில் நிச்சயம் தவறில்லை. ஒரு புரட்சிகர சூழ்நிலையின் அறிகுறிகள் என்ன? எனப் பொதுவாகப் பேசுகையில், கீழ்க்கண்ட மூன்று முக்கிய அறிகுறிகளை நாம் நிச்சயம் குறிப்பிடத் தவறமாட்டோம்:

எந்த மாற்றமுமில்லாமல் ஆளும் வர்க்கங்கள் தங்களின் ஆட்சியை பராமரித்திட முடியாமற் போகையில்; 'மேல்மட்ட வர்க்கத்தினர் மத்தியில்' ஏதோ ஒரு வடிவத்தில் ஒரு நெருக்கடி ஏற்படுகையில், ஆளும் வர்க்கங்களின் கொள்கையில் ஒரு நெருக்கடி ஏற்பட்டு, அது ஒரு பிளவிற்கு இட்டுச்சென்று,

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# ஸ்டோலிபின் பிற்போக்கு அலையால் போல்ஷ்விக்குகள் பின்வாங்க நேர்ந்தாலும் கட்சி காப்பாற்றப்பட்டது

3ம் பக்கத் தொடர்ச்சி

அதன்மூலம் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் அதிருப்தியும் சீற்றமும் வெடித்துக்கிளம்புகின்றது. ஒரு புரட்சி நடைபெறுவதற்கு வழக்கமாக 'கீழ்த்தட்டு வர்க்கங்கள் பழைய பாணியில் வாழ விரும்பாமலிருப்பது' போதுமானதாக இருக்காது. அதற்கு, 'மேல்தட்டு வர்க்கங்கள்' பழைய பாணியில் வாழ முடியாமலிருப்பதுவும்கூட அவசியமாக இருக்கின்றது. இது ஒரு புரட்சிக்கான சூழ்நிலைமையாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்களும் தேவைகளும் வழக்கத்திற்கு மாறாக மேலும் கடுமையாகி வரும் சமயங்கள் ஒரு புரட்சிக்கான சூழ்நிலைமையாகும்.

மேற்கண்ட காரணங்களின் ஒரு விளைவாக 'அமைதி காலத்தில்' எவ்வித முறையீடும் இல்லாமல் தங்களையே கொள்ளையடித்திட அனுமதித்த, ஆனால் கொந்தளிப்பான காலத்தில் நெருக்கடியின் அனைத்து சூழ்நிலைமைகளினாலும் 'மேல்தட்டு வர்க்கம்' தாங்களாகவே தனித்த வரலாற்று ரீதியிலான செயல்பாட்டில் ஈர்க்கப்பட்டதினாலும், வெகுஜனங்களின் செயல்பாடுகள் கணிசமாக அதிகரிக்கும் நேரம் ஒரு புரட்சிக்கான சூழ்நிலைமையாகும்.

தனிப்பட்ட குழுக்கள் மற்றும் கட்சிகள் மட்டுமின்றி, தனித்த வர்க்கங்களின் விருப்பத்திற்கு அப்பாற்பட்டு தனித்து நிற்கின்ற, இத்தகைய புறவய மாற்றங்கள் நிகழாமல் ஒரு புரட்சி நடைபெற முடியாது என்பது பொதுவான விதியாகும். அத்தகைய புறவய மாற்றங்கள்தான் "ஒரு புரட்சிக்கான சூழ்நிலைமை" என சுருக்கமாகக் கூறப்படுகின்றது. (தொகுப்பு நூல்கள், தொகுதி 21, பக்கங்கள் 213–214)

### போல்ஷ்விக் கட்சி உருவாக்கப்பட்டது

லெனினுக்கு எதிரானவர்களை, போல்ஷ்விக்குகளுக்கு மற்றும் அதன் போக்குக்கு எதிரானவர்களை ஒன்றிணைத்து 'ஆகஸ்ட் கூட்டணி' என்ற ஒன்றை 1912ல் ட்ராட்ஸ்கி உருவாக்கினார். போல்ஷ்விக்குகள் பக்கமோ அல்லது மென்ஷிவிக்குகள் பக்கமோ தான் சாரவில்லை எனவும், தான் ஒரு நடுநிலையாளராகவும் (Centrist) சமரசம் செய்பவராக இருந்தாரெனவும் ட்ராட்ஸ்கி அறிவித்தார். அவ்வாறாக அறிவித்து, பிற ட்ராட்ஸ்கியவாதிகளை ஒன்றிணைத்து, லெனினது விருப்பத்திற்கு மாறாக 1910 ஜனவரியில் மத்தியக் கமிட்டியின் பிளீனத்திற்கு அவர் அறைகூவல் விடுத்தார். பிளீனத்தை கூட்டிடும் முடிவை கருத்தில் கொண்டு அவர்களது வெளியீடுகளை போல்ஷ்விக்குகள் நிறுத்தினாலும், மென்ஷ்விக்குகளும் ட்ராட்ஸ்கிகளும் அவர்களின் வெளியீடுகளை நிறுத்தவில்லை. இத்தகைய கட்சிவிரோத சக்திகளுக்கு எதிரான யுத்தத்தை தொடுத்துக் கொண்டிருந்த அதே வேளையில், அனைத்து போல்ஷ்விக்குகளையும் ஒன்றிணைத்து ஒரு தனியான போல்ஷ்விக் கட்சியை உருவாக்கிட வேண்டியிருப்பதை போல்ஷ்விக்குகள் உணர்ந்தார்கள். இந்த நோக்கத்துடன், ஆறாவது அனைத்து இரஷ்யர்களின் கட்சி மாநாடு 1912 ஜனவரி மாதம் பிராகில் (Prague) நடைபெற்றது. "போல்ஷ்விக்குகளுக்கும் மென்ஷ்விக்குகளுக்குமிடையே ஒரு எல்லைக்கோட்டை வரைந்து நாடு முழுவதிலுமுள்ள போல்ஷ்விக் அமைப்புகளை ஒன்றிணைத்து அவற்றினை ஒரு ஒன்றுபட்ட போல்ஷ்விக் கட்சியாக ஆக்கியிருப்பதினால் நமது கட்சியின் வரலாற்றில் இம்மாநாடானது அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது" என ஸ்டாலின் அவர்கள் அம்மாநாட்டைப் பற்றி எழுதினார். (Communist Party of Soviet Union (Bolshevik) - சிபிஎஸ்யு (போ)) ன் வரலாறு என்ற நூலில் பக்கம் 222ல் குறிப்பிடப்பட்ட சிபிஎஸ்யு (போ)ன் பதினைந்தாம் மாநாட்டின் சொற்பிறழா அறிக்கை). இவ்வாறாக, சந்தர்ப்பவாத மென்ஷ்விக்குகளையும், கலைப்புவாதிகளையும் பிறரையும் வெளியேற்றியதின் மூலம், ஆர்எஸ்டிஎல்பி (RSDLP) கட்சியானது ஒரு புதிய ஒற்றைத் தன்மை வகைப்பட்ட (Monolithic) 'போல்ஷ்விக் கட்சி' என்றழைக்கப்படும் கட்சியாக மாற்றியமைக்கப்பட்டது. ஒரு உண்மையான புரட்சிகர கட்சியைக் கட்டிட விரும்புவோருக்கு இதுவே லெனினிச மாதிரியான கட்சியாகும்.

ஸ்டோலிபின்–ன் பிற்போக்கு நாட்களின்போது நாடு முழுவதும், குறிப்பாக தொழிலாளிகளிடமும் விவசாயிகளிடமும் இருந்துவந்த விரக்தியின் சோர்வினை அகற்றி, புதுப்பிக்கப்பட்ட உயிர்த் துடிப்புடன் அனைத்து சந்தர்ப்பவாத, ஊசலாட்ட மற்றும் நம்பிக்கை துரோக சக்திகளின் பிடியிலிருந்து தனித்துவம் வாய்ந்த லெனினது தலைமையின் கீழான போல்ஷ்விக் கட்சி விடுபட்டிருந்தது. மீண்டும் புரட்சிகர இயக்கம் முன்னேறித் துவங்கிச் சென்றது. உழைக்கும் வர்க்கத்தின் எதிரிகள் மற்றும் அவர்களின் ஏஜண்டுகளுக்கெதிராக தொடுக்கப்பட்ட யுத்தத்தின் மூலம் போல்ஷ்விக் கட்சியானது அதன் வேலை சக்தியை மேலும் ஸ்திரப்படுத்திக் கொண்டு உழைக்கும் வர்க்கத்துடனான அதன் இணைப்பை விரிவுபடுத்திக்கொண்டது.

கட்சியின் புதிய தினசரி பத்திரிகையான 'ப்ராவ்தா' (Pravda –உண்மை) 1912 மே 5ஆம் நாள் வெளிவந்தது. அதே ஆண்டு ஜார் அரசாங்கம் நான்காவது டூமா பாராளுமன்றத்தைக் கூட்டியது. போல்ஷ்விக் கட்சி பெரும் முயற்சி எடுத்து டூமா தேர்தலில் பங்கெடுத்து அதன் 6 உறுப்பினர்கள் திரும்பத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன் பின்னர் கட்சியானது, டூமாவை புரட்சிகர நடவடிக்கைகளுக்கான மேடையாக பயன்படுத்திக்கொண்டு, பாடுபடும் மக்களின் பத்திரிகையாக, ப்ராவ்தா போன்ற ஒரு வியத்தகு செய்தித்தாளை வெளியிட்டு வந்ததின்மூலம், புதிதாக வந்துகொண்டிருக்கும் தலைமுறையைச் சார்ந்த புரட்சிகர தொழிலாளர்களை பயிற்றுவிக்கும் மற்றும் கற்பிக்கும் கடமையை தொடர்ந்து கொண்டிருந்தது. ப்ராவ்தாவின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறும்போது, "1912ல் துவக்கப்பட்ட ப்ராவ்தா பத்திரிகையானது 1917ல் போல்ஷ்விசம் வெற்றியடைவதற்கான அடிக்கல்லை நிறுவியது" என ஸ்டாலின் கூறினார்.

ஆகஸ்ட் 1914யில் ஜெர்மனி இரஷ்யாவிற்கெதிரான போரை அறிவித்தது. போர் பற்றிய கேள்வியில், லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியால் எடுக்கப்பட்ட தன்னிகரில்லா நிலைபாடு குறித்து சுருக்கமானதொரு விளக்கம் தேவைப்படுகின்றது.

### உலகப்போரும் போல்ஷ்விக் கட்சியும் புரட்சிகர இயக்கமும்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில், உலக முதலாளித்துவம் ஏகாதிபத்திய கட்டத்தை அடைந்துவிட்டதென்றும், நிதி மூலதனத்தின் வளர்ச்சியே அதன் குறிப்பிடத்தக்க அம்சம் எனவும் லெனின் சுட்டிக்காண்பித்தார். நிதி மூலதனத்தின் நலனை முன்னிட்டு, ஏகாதிபத்திய நாடுகளுக்கு புதிய புதிய சந்தைகளும், புதிய புதிய காலனிகளை ஆக்கிரமிப்பதும், மூலதன ஏற்றுமதிக்கான புதிய புதிய களங்களும் மூலப் பொருட்களை தேடுவதும் தேவைப்பட்டது. ஏகாதிபத்திய அரசுகளின் பொருளாதார மற்றும் ராணுவ பலத்தில் ஒரு சமநிலை மாற்றம் ஏற்பட்டது. இத்தகைய ஏகாதிபத்திய சக்திகள் அவர்களின் அரசியல் செல்வாக்கை விரிவுபடுத்திடுவதையும், ஏகபோகங்களுக்கான அதிகபட்ச லாபத்தை அறுவடை செய்திடுவதையும் கருத்தில் கொண்டு உலக சந்தையை மீண்டும் பங்குபோட விரும்பின. உலக சந்தையை எவர் கைப்பற்றுவது, உலகச்சந்தையில் எவ்வளவு பங்கை கைப்பற்றுவது என்ற கடுமையான போராட்டம் நடப்பதால் ஏகாதிபத்தியப் போரானது தவிர்க்கவியலாததாகும். இவ்வாறாகத்தான் முதல் உலகப் போர் துவங்கியது. இரஷ்யா, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் பிரிட்டிஷ் பேரரசு ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்துகொண்டு ஒரு கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டன. இதனை எதிர்த்து ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகள் ஒரு இணைப்பை ஏற்படுத்திக்கொண்டன.

தத்தம் நாடுகளின் முதலாளிகள் லாபத்தை அதிகரித்திடுவதற்காக, தொழிலாளர்கள் ஒருவரையொருவர் சுட்டு வீழ்த்துவது ஒரு குற்றம் என உலகிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் கருதுவது என்று 1912ல் பாஸ்லேயில் (Basle) நடைபெற்ற உலக மாநாட்டின் 2வது சர்வதேசிய பிரகடனத்தின்படி, 2வது சர்வதேசியத்தைச் சார்ந்த கட்சிகள் தொழிலாளர்களின் நலன்களுக்கு துரோகமிழைக்காமல், குரலெழுப்பும் தைரியமிருந்திருந்தால், போரானது இத்தகைய பயங்கரமான குணாம்சத்தை அடைந்திருக்காதது மட்டுமின்றி, உலக கம்யூனிஸ்ட் கட்சிகள் யாவும் பலனடைந்திருக்கும். ஆனால் போர் துவங்கியவுடன், இப்பிரகடனத்தை கடைபிடிப்பதற்குப் பதிலாக, கிட்டத்தட்ட 2வது சர்வதேசியத்தைச் சார்ந்த கட்சிகள் அனைத்தும் தேசியவெறிவாதத்திற்குப் பலியானதுடன் 'தந்தையர் நாட்டின் பாதுகாப்பு' எனும் கோஷங்களை எழுப்பிடத் துவங்கின. லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி மட்டுமே பாஸ்லே மாநாட்டு பிரகடனத்திற்கு விசுவாசமாகச் செயல்பட்டது. இரஷ்யாவில், மென்ஷ்விக்குகளும் சோசலிசப் புரட்சியாளர்களும் தேசியவெறிவாத முழக்கங்களுடன் இரஷ்ய ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து கொண்டனர். அவர்கள் வர்க்க ஒத்துழைப்பு மற்றும் முதலாளிகள் தொழிலாளர்களுக்கிடையேயான சமாதானம் போன்ற கருத்துக்களைப் பரப்பி, பிற நாடுகளுக்கெதிராக தொடுக்கப்பட்ட இரஷ்யப் போருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யத் துவங்கினர். காலனி நாடுகளில் கொள்ளையடித்ததைக் கொண்டு அச்செல்வத்தின் உதவியுடன் ஏகாதிபத்திய–முதலாளித்துவ வர்க்கம் நடைமுறையில் ஐரோப்பிய மேல்தட்டு தொழிலாளர்களுக்கு லஞ்சம் கொடுத்துக்கொண்டிருந்ததின் மூலம் உயர்குடி இயல்புடைய தலைவர்களை உருவாக்கிக்கொண்டிருந்தது. தொழிலாளர்கள் மத்தியிலிருந்து வந்த அத்தகைய தலைவர்கள் 2வது சர்வதேசியத்தைச்சார்ந்த கட்சிகள் மத்தியில் போதிய செல்வாக்கைப் பெற்றிருந்தனர். இதன் காரணமாக பின்னர் லெனின் அவர்கள், 2வது சர்வதேசியத்தை கலைத்திட வேண்டியிருந்தது.

லெனின் அவர்கள், மென்ஷ்விக்குகளின் சந்தர்ப்பவாத சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் எதிராக உள்நாட்டிற்குள் போர் தொடுத்ததுடன் உலக கம்யூனிச இயக்கத்தில் தோன்றியிருக்கும் குழப்பங்களுக்கு எதிரான சமரசமற்ற போராட்டத்தையும்கூட முன்னெடுத்துச் சென்றிட வேண்டியிருந்தது. 1916யில் லெனின் அவர்கள், ஏகாதிபத்தியம்–முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற பிரசித்தி பெற்ற நூலை எழுதினார். இந்நூலில், முதலாளித்துவமானது வளர்ச்சியின் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதால், அதன் முற்போக்கான பாத்திரத்தை இழந்து, ஒட்டுண்ணி இயல்புகொண்ட பிற்போக்கு முதலாளித்துவமாக மாறிவிட்டதென்பதைச் சுட்டிக்காண்பித்தார். இருப்பினும், முதலாளித்துவம் அதன் வாழ்நாளை அதுவே முடித்துக்கொள்ளும் என்று இதற்கு பொருளல்ல. உழைக்கும் வர்க்கமானது, புரட்சியை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி, இவ்வமைப்பை வேரோடு சாய்த்திட வேண்டியிருக்கின்றது. "பாட்டாளி வர்க்கத்தின் சமூகப் புரட்சிக்கு முந்தைய நாளே ஏகாதிபத்தியம்" என லெனின் கூறினார். ஏகாதிபத்தியமும் பாட்டாளிவர்க்கப் புரட்சியுமான இக் காலகட்டத்தில்தான் ஒரு தனி முதலாளித்துவ நாட்டில் சோசலிசத்தை அடைந்திட முடியுமென லெனின் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார். லெனின் அவர்களது இத்தகைய ஓர் மதிப்பீட்டிலிருந்து, பல்வேறு நாடுகளின் பாட்டாளி வர்க்கம் தத்தம் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்திற்கெதிரான புரட்சியினை அவர்களால் வெற்றிகரமாக நடத்திட முடியுமென்பதை உணர்ந்துகொண்டனர். இந்த உணர்வானது, பல்வேறு நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தை உத்வேகப்படுத்தியது.

போருக்குப் பதிலாக அமைதியை நிறுவிடும் வாய்ப்பினை பாட்டாளிவர்க்கப் புரட்சியின் வெற்றியுடன் போல்ஷ்விக்குகள் இணைத்துப் பார்த்தார்கள். பாட்டாளிவர்க்கப் புரட்சியே ஏகாதிபத்தியப் போருக்கு முடிவுகட்டி, ஏகாதிபத்திய

தொடர்ச்சி 5ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# டிராட்ஸ்கியையும் பிறரையும் தோல்வியுறச் செய்து லெனின் போல்ஷ்விக் கட்சியை நிறுவினார்

4ம் பக்கத் தொடர்ச்சி

ஆட்சியை வேரறுப்பதின் மூலம் யதார்த்தத்தில் அமைதியை நிறுவிட முடியும் என்று அவர்கள் கூறினர். இதுவே போர், அமைதி மற்றும் புரட்சி குறித்த கருத்தியல் மற்றும் போர் திட்டமாக இருந்தது, அதன் அடிப்படையிலேயே போல்ஷ்விக்குகள் தங்களின் புரட்சிகர நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். ஏகாதிபத்தியம்–முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியிலிருந்து முதல் உலகப்போர் ஏற்பட்டது. முதலாளித்துவ நெருக்கடி தீர்க்கப்படுவதற்குப் பதிலாக அது மேலும் உக்கிரமடைந்தது. அதனால் இரஷ்யாவின் நிர்வாகம் மேலும் பலவீனப்பட்டது. சாமானிய மக்களது வாழ்வில் ஏகாதிபத்தியப் போர் இழைத்திட்ட பேரழிவு மற்றும் சாவு எண்ணிக்கையை மனதில் கொண்டு, லெனின் அவர்கள் நாட்டிலுள்ள தொழிலாளர்களை ஜார் ஆட்சிக்குக்கெதிராக தட்டியெழுப்பி, போருக்குக் காரணமாகவும் மேலும் இன்னபிற துயரங்களுக்கும்கூட காரணமாயிருக்கின்ற ஏகாதிபத்திய–முதலாளித்துவ ஆட்சியை திறம்பட அடித்து நொறுக்கிட வெகுஜன மற்றும் வர்க்கப் போராட்டங்களை தீவிரப்படுத்திட வேண்டுமென அறைகூவல் விடுத்தார்.

இந்த ஏகாதிபத்தியப் போர் உண்மையில் மக்களின் போர் என்ற பொய்யை வெகுஜனங்களிடம் நம்பவைத்திட இரஷ்யப் பூர்ஷ்வாக்கள் முயற்சித்தனர். இரஷ்யப் பூர்ஷ்வாக்களின் பொய்யான தேசபக்தி தோற்றத்தை ஏற்படுத்திடும் தீவிரமான கூட்டாளியின் பாத்திரத்தை மென்ஷ்விக்குகள் எடுத்துக்கொண்டனர். போல்ஷ்விக்குகள் இதனை உறுதியாக எதிர்த்து, போருக்கு எதிராகவும் பூர்ஷ்வா வர்க்கத்தின் சூழ்ச்சிக்கு எதிராகவும் நாட்டின் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒருங்கு திரட்டிட முழு மூச்சுடன் ஈடுபட்டனர். அவர்கள் கடற்படையினர் மற்றும் தரைப்படை ராணுவத்தினர் மத்தியிலும்கூட பிரச்சாரம் மேற்கொண்டு, முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் மக்களின் பிரதான எதிரியாக இருக்கின்றதென்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வைத்திட முயற்சித்தனர். அமைதி நிலைநாட்டப்பட்டிருக்க வேண்டுமெனில், படை வீரர்களின் ஆயுதங்கள் தத்தம் நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கத்தினருக்கெதிராக திருப்பப்பட்டு இந்த ஏகாதிபத்தியப் போரானது ஒரு உள்நாட்டுப் போராக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

போல்ஷ்விக்குகளின் வாதமானது, இரஷ்யாவின் சாமானிய மக்களின் அனுபவத்துடன் ஒத்துப் போனது. இரஷ்ய நிலவுடைமையாளர்கள் மற்றும் முதலாளிகள் போர் துவங்கிய நாள் முதற்கொண்டு கொழுத்து வந்தனர். அதற்கு நேரெதிராக, போரானது தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கையில் பாதிப்புகள் மற்றும் இழப்புகளின் சுமையை ஏற்றிக்கொண்டேயிருந்தது. போரில் லட்சக்கணக்கானோர் மாண்டனர். போரால் சீரழிந்த நாட்டில் தொற்று நோயினால் எண்ணற்ற உயிர்கள் இழக்கப்பட்டன. இரஷ்யப் பொருளாதாரம் அதன் அழிவிற்குச் சென்றது. கிட்டத்தட்ட ஒன்றரை கோடி இளைஞர்கள் ராணுவத்தில் சேர்ந்திட கட்டாயப்படுத்தப்பட்டதால், அந்நேரம் இரஷ்யாவில் கடுமையான தொழிலாளர் தட்டுப்பாடு நிலவியது. ஒன்றன்பின் ஒன்றாக ஆலைகளும் தொழிற்சாலைகளும் மூடப்பட்டன. விவசாயமும்கூட தேங்கி நின்றது. போர்முனையிலுள்ள வீரர்களும் சாமானிய வெகுஜனங்களும் பசியால் வாடிக்கொண்டு, முறையான ஆடைகள் மற்றும் காலணிகள் இன்றி நிராதரவுடன் வாழ்க்கையைக் கழித்தனர். பேரழிவு மிக்க இப்போர் இரஷ்ய வளங்களின் மிகப்பெரும் பங்கினை விழுங்கிக்கொண்டிருந்தது.

மற்றொருபுறம், ஜார் ராணுவம் மென்மேலும் தோல்வியைத் தழுவிக்கொண்டிருந்தது. மோசமான ஆயுதப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டதால், அவர்களால் ஜெர்மன் பீரங்கிகளுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அதே சமயம், ஜார் ஆட்சியின் போர் அமைச்சர் சுக்கோநிலொவ் என்பவர் நாட்டின் நலன்களுக்கு துரோகமிழைத்துவிட்டு ஜெர்மனியின் ராணுவத்திற்கு உதவி புரிந்ததாகவும், ஜாரின் இன்னும் சில அமைச்சர்களும் தளபதிகளும்கூட அவ்வாறே துரோகமிழைத்தனர் என்பதும் தெரிய வந்தது. அதன்விளைவாக, ஜார் படையானது பின்வாங்கிக் கொண்டேயிருக்க, ஜெர்மனியானது படிப்படியாக மிகப்பெரும் பலத்தைக் காட்டி போலந்தையும் பால்ட்டிக் மாகாணத்தின் சில பகுதிகளையும் பிடித்துக்கொண்டது.

இவையெல்லாம், ஜார் படையினருக்கெதிராக தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகளிடம் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி, நாடு முழுவதிலும் போர் முனைகளிலும்கூட ஜார் நிர்வாகத்திற்கெதிரான மக்களின் புரட்சிகர இயக்கங்களை உக்கிரப்படுத்தியது.

### அரண்மனைக் கிளர்ச்சி

அதிருப்தியானது படிப்படியாக இரஷ்ய ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்கள் மத்தியிலும்கூட பரவிக்கொண்டிருந்தது. மதத் தலைவரான ராஸ்புடின் ஜார் அரசாங்கத்தின் செல்வாக்குமிக்க நபர்களுடன் சேர்ந்துகொண்டு ஜெர்மனியுடன் அமைதியுடன்பாடு ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்த முறையைக் கண்டு, ஜாரின் போர் முயற்சிகள் தோல்வியில் முடியும் என்பதில் அந்நாட்டின் முதலாளிகளுக்கு எவ்வித ஐயமும் எழவில்லை. ஜார் மன்னர் தனியான ஒரு அமைதி உடன்படிக்கைக்கு போகக்கூடும் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. அத்தகைய ஒரு சூழலில், இரஷ்ய முதலாளித்துவவாதிகள் இரண்டாம் ஜார் நிக்கொலஸின் சகோதரரான மிக்கேல் ரொமொநவ்–வை ஆட்சியிலமர்த்திட விரும்பி, அதற்கேற்ப திட்டமிட்டனர். அரண்மனைக் கிளர்ச்சியின் மூலம் ஜாரை மாற்றுவதின்மூலம், ஒரே தாக்குதலில் இரண்டு பறவைகளை கொன்றிட முதலாளித்துவவாதிகள் விரும்பினர். முதலாவது, அரசாங்க அதிகாரத்தைப் பயன்படுத்தி போரைத் தொடர்வதாகும். இரண்டாவதாக, ஜார் ஆட்சி மாற்றம் வாயிலாக இரஷ்ய மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி மக்களிடையே அலையலையாய் எழும்பி வந்த புரட்சிகரப் போராட்டங்களின் எழுச்சியை அடக்குவதாகும்.

ஜார் அரசாங்கமானது ஜெர்மனியுடனான ஒரு தனிப்பட்ட அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டதால், பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் அரசாங்கங்கள் இந்த ஏகாதிபத்தியப் போர் கூட்டாளி ஒருவரை இழப்பது மட்டுமின்றி, இரஷ்யாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான வீரர்களை அனுப்புவதும்கூட நிறுத்தப்பட்டுவிடும். ஆதலால், பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் அரசாங்கங்கள் இரஷ்ய முதலாளித்துவவாதிகளின் இரண்டாம் ஜார் நிக்கொலஸை தூக்கியெறிந்திட நடத்திய அரண்மனைக் கிளர்ச்சியின் முயற்சிக்கு முழு வீச்சில் ஆதரவை வழங்கின.

இரஷ்யப் படையானது தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்துக்கொண்டிருந்தது போலவே நாட்டினுள் நிதி நெருக்கடியும்கூட தொடர்ச்சியாக மிகப்பெரும் பரிமாணத்தை அடைந்துகொண்டிருந்தது. **1917**ஆம் ஆண்டு ஜனவரி–பிப்ரவரி மாதவாக்கில், உணவு, மூலப்பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் விநியோகத்தில் கடும் குழப்பநிலை தோன்றியது. பெட்ரோகிராட் மற்றும் மாஸ்கோவுக்கான உணவு விநியோகம் கிட்டத்தட்ட நின்றுவிட்டது. ஆலைகளும் தொழிற்சாலைகளும் ஒன்றன்பின் ஒன்றாக மூடத்துவங்கி, பலரை வேலையிழக்கச் செய்துவிட்டது. இரஷ்ய மக்களின் பெரும் எண்ணிக்கையினர் எப்போதுமில்லாத வகையில், இத்தாங்கவொணா சூழ்நிலைமையிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி, எதேச்சதிகார ஜார் ஆட்சிக்கு ஓர் முடிவு கட்டுவதுதான் என்ற முடிவிற்கு வந்துகொண்டிருந்தனர்.

ஜார் ஆட்சியானது முடிவிற்கு வருவது தெளிவாகத் தெரிந்தது. அரண்மனைக் கிளர்ச்சியை நடத்துவதின்மூலம் இரஷ்யாவிலிருந்த தீவிர நெருக்கடியை சமாளித்திட இரஷ்ய முதலாளித்துவவாதிகள் விரும்பினாலும், சாமானிய மக்கள் மாறுபட்ட பாதையில் சென்றுகொண்டிருந்தனர்.

### பிப்ரவரி புரட்சியும் ஜாரின் வீழ்ச்சியும்

**1917**ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்து, ஜனவரி மாதம் **9**ஆம் நாள் அங்கு ஒரு வேலை நிறுத்தம் நடைபெற்றது. பெட்ரோகிராட், மாஸ்கோ, பாகு மற்றும் நிஸ்னி–நவொகார்ட் ஆகியன ஊர்வலங்களாலும் ஆர்ப்பாட்டங்களாலும் குலுங்கியன. போலீஸ் கொடுமைகள் இருந்தபோதிலும், தொழிலாளர்களின் எண்ணிக்கை எப்போதுமே அதிகரித்தவாறு இருந்தது. மேலும் நாடுதழுவிய வேலைநிறுத்த திட்டத்தை வெற்றியடையச்செய்திட, வேலை நிறுத்தத்தில் இணைய ஆரம்பித்தனர்.

மென்ஷ்விக்குகளும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களும் துவக்கத்தில் தாராளவாத பூர்ஷ்வாக்களின் விருப்பத்திற்கிணங்க இந்த முன்கூட்டியே துவங்கிய இயக்கத்தை வழிநடத்திட முயற்சித்தனர். பிப்ரவரி–**14**ல் டூமா அமர்வின் முதல் தொடக்க நாள் ஆகும். மென்ஷ்விக்குகள் டூமாவின் முன்பாக ஒரு தொழிலாளர் ஊர்வலத்தை நடத்திடத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் தொழிலாளர்கள் டூமாவை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக, போல்ஷ்விக்குகளின் அறைகூவலுக்கு இணங்க ஒரு எதிர்ப்புப் பேரணியை நடத்தினர்.

**1917**, பிப்ரவரி **18** ல் பெட்ரோகிராட்–ல் உள்ள புடிலொவ் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் ஒன்று வெடித்துக்கிளம்பியது. பிப்ரவரி **22**ஆம் நாள், பெரும்பாலான பெரிய தொழிற்சாலைகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்

## கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையில் உள்ள பிரச்சினைகள் குறித்து ஏஐடிஎஸ்ஓ கல்வி இணை இயக்குனர் அலுவலகத்தில் மனு சமர்ப்பித்தல்



மதுரையில் மே 23, 2017 அன்று உயர் கல்வி இணை இயக்குனரிடம் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் மாநிலச் செயலாளர், தோழர் வால்டேர் தலைமையில் மனு சமர்ப்பிக்கும் காட்சி

## மாடுகளைக் கொல்வதற்கு விதிக்கப்பட்ட சமீபத்தியத் தடை

# உழைக்கும் மக்களைப் பலிகொடுத்து பசுமாடுகளைக் காப்பதில் என்ன தர்க்கம் உள்ளது

2ம் பக்கத் தொடர்ச்சி

பொறுமையுடன் விளக்கி இணங்கவைத்து அவர்களது மதத்தை வலியுறுத்தினார்கள். பல்வேறு மதங்களுக்கிடையில் வேறுபாடுகளும்கூட காணப்பட்டன. ஆனால், புத்தர், மகாவீரர், சைத்தன்யர், இயேசு கிருஸ்து, ஹஸ்ரத் முகமது, கன்பூசியஸ் அல்லது பிற நேர்மையான மத போதகர்கள் எவரும் கொடுவாளை கையிலேந்திக்கொண்டோ அல்லது பிற மதங்களுக்கெதிரான விஷத்தினை உமிழ்ந்தோ மக்களை அவர்களது மதங்களுக்கு மாற்றிட முயற்சிக்கவில்லை. அனைத்து மதங்களும் ஒத்திசைவுடன் இருந்துகொண்டு சகிப்புத்தன்மையானது நிலவியது. மேற்கூறிய மதபோதகர்களுக்குப் பின்வந்தவர்களில் சிலர் செல்வாக்கு மிக்கவர்களாக ஆகிட அல்லது வீட்டு சொத்துக்களை அதிகரித்துக்கொள்ள மத மாற்றம் செய்திட பலத்தை பிரயோகித்தபோது சில சம்பவங்கள் நடைபெற்றன. இவைகளெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற பிறழ்ச்சிகளாகும். சகிப்புத்தன்மை மற்றும் அனைத்து மதங்களின் சமாதான சகவாழ்வு என்பது பிரதான போக்காகவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறையாகவும் இருந்தது. இது ஒரு தற்செயல் நிகழ்வாக இல்லாமல், மதபோதகர்கள் மற்றும் அவர்களின் நேர்மையான சீடர்களின் விருப்பமாகவும் இருந்தது. சுயக் கட்டுப்பாடனது அந்த அளவிற்கு இருந்தது.

இது குறித்து, அதிக மதங்கள் இருக்கின்றதென்றால் அதிகமான பாதைகள் இருக்கின்றன எனும் ராமகிருஷ்ணரின் பிரசித்தி பெற்ற கூற்று ஒன்று உள்ளது. இயேசு கிருஸ்து மற்றும் ஹஸ்ரத் முகமது ஆகியோருக்கு விவேகானந்தர் அவர்கள் மரியாதை செலுத்தும்போது, தனது மகன் ஒரு புத்த மதத்தினனாகவோ, அவரது மனைவி ஒரு கிருஸ்துவராகவோ மற்றும் அவரே ஒரு முஸ்லீமாக மாறுவதற்கு முழுமையான வாய்ப்பிருப்பதாக தெளிவான வார்த்தைகளில் கூறினார். இத்தகையோர் சகிப்புத்தன்மை மனப்பாங்கை உயர்த்திப் பிடிக்கவில்லையா? ஹஸ்ரத் முகம்மது அவர்கள் இஸ்லாமுக்கு கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதற்கு எதிரான கருத்தைப் பேசவில்லையா? பிற மதங்களை வெறுத்து ஒழித்துக்கட்டி, பிற மதங்களில் நம்பிக்கை கொண்டவர்களை ஒரு குறிப்பிட்ட மதத்தின் ஆணைகள் என சொல்லியிருப்பவைகளை வலுக்கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வைத்திட எந்த மதத்தில் அனுமதி தரப்பட்டிருக்கிறது? சமூக முன்னேற்றத்தின் போக்கில் மற்றும் மாறிய சூழ்நிலையில், அறிவியல் ரீதியில் காரணகாரியமறியும் இக்காலகட்டத்தில் மதம் இப்போது காலாவதியாகிப் போயிருந்தாலும், மதம் சமூகத்தில் பொருத்தமானதாக இருந்த சமயத்தில் பிற மதங்களின்பாலான பொறுமையின்மை அல்லது சகிப்புத்தன்மையின்மை என்பது ஒருபோதும் காணப்படவில்லை என்பதைக் காண்பிப்பதற்காக இச்சூழ்நிலைமையில் இந்த சுருக்கமான விவாதம் அவசியமாகியது.

### அப்பட்டமான மனித உரிமை மீறல்கள்

விஞ்ஞானபூர்வ சிந்தனையையும் காரணகாரியமறியும் உத்வேகத்தையும் ஊட்டி வளர்த்த சில சகாப்தம் படைக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், வளர்ந்துகொண்டிருந்த முதலாளித்துவத்தின் ஆன்மீக மேற்கட்டுமானமாக மறுமலர்ச்சி கால சிந்தனைகள் தோன்றிய காலத்தில், மதம் மற்றும் மதத்தினடிப்படையிலான சிந்தனைகளும் நம்பிக்கைகளும் மறையத் துவங்கின என்பதை மனதில் கொள்ள வேண்டும். அது பூர்ஷ்வா கண்ணோட்டத்திலிருந்தாலும், காரணகாரியமறியும் காலகட்டமானது துவங்கி, கடவுள் பற்றிய கோட்பாடும் மதத்தின் செல்வாக்கும் கருத்தும் எதிர்ப்பை சந்திக்க ஆரம்பித்தன. அந்நேரத்தில், மதம் பலவந்தமாக ஒழித்துக்கட்டப்படவில்லை மற்றும் மத நம்பிக்கை கொண்டவர்கள் துன்புறுத்தப்படவோ, தொல்லை தரப்படவோ அல்லது அடித்துக்கொல்லப்படவோ இல்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி உள்ளது என்பதை அங்கீகரிக்காத மதச்சார்பின்மைவாத சிந்தனையாளர்கள்கூட, மதம் என்பது ஒருவரது தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்த விஷயம், அது சமூக அரசியல் களங்களில் தலையிடாது என்பதை தெளிவாக விளக்கினர். இவ்வாறாக, சகிப்புத்தன்மை மனப்பான்மை என்பது நிலவியது. கூடவே இறை நம்பிக்கை, இறை நம்பிக்கையின்மை, பல்வேறு மதங்கள் ஆகியவற்றிற்கிடையேயான சமாதான சகவாழ்வும் நிலவியது. பூர்ஷ்வா மனிதாபிமானம் அதன் ஆரம்ப காலகட்டத்தில் உன்னதக்கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் சுதந்திரத்திற்காகப் போராடியபோது, சகிப்புத்தன்மை அதன் தூணாக இருந்தது. பூர்ஷ்வா ஜனநாயகமானது ஒரு வர்க்க அடிப்படையைக் கொண்டிருந்தாலும், வளர்ந்துகொண்டிருந்த முதலாளித்துவத்தின் அன்றைய நாட்களில் தோன்றிய இத்தகைய அனைத்து கோட்பாடுகளும், விதிமுறைகளும் மற்றும் நடைமுறைகளும் அப்போதைய சமூக நலன்களுக்கு உகந்த வகையில் வளர்ந்தன. அக்காலகட்டத்தில் பூர்ஷ்வா ஜனநாயகமானது, சமூக முன்னேற்றத்தை உந்தித்தள்ளி, உண்கின்ற உரிமை, இறை நம்பிக்கை கொண்டிருக்கும் அல்லது நம்பிக்கை கொள்ளாதிருக்கும் உரிமை, தனிப்பட்ட வாழ்க்கையில் தான் நம்பும் மதத்தை போதிக்கும் உரிமை மற்றும் இன்னும் பல உரிமைகள் போன்ற சில அடிப்படை உரிமைகளை மக்களுக்கு வழங்கியது. கூடவே, மனித உரிமைகள் பற்றிய பரந்துபட்ட கோட்பாட்டையும் கொண்டுவந்தது. இத்தகைய உரிமைகள் யாவும் வெறுமனே அள்ளித்தரப்படவில்லை. அவை வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கும் தனிமனித மற்றும் மனித சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் வழங்கப்பட்டன. இருந்தபோதிலும், உரிமைகள் என்பதன் பொருள் கடமை மற்றும் சுதந்திரம் என்பதாகும். இது எதேச்சதிகரமாகச் செயல்படுவது அல்லது எதையும் செய்வதற்கான அனுமதி என்பதல்ல என்பதை மறந்துவிட்டு, எவரும் தவறாகப் பயன்படுத்திடாத வண்ணம் அல்லது மீறாத வண்ணம் போதிய கட்டுப்பாட்டுடன் அவை வழங்கப்பட்டன. இன்று ஓர் நிர்வாக ஆணையைக்கொண்டு அத்தகைய உரிமைகளை எங்ஙனம் பறித்திட முடியும்? ஒன்றன்பின் ஒன்றாக இத்தகைய உரிமைகள் யாவும் பறிக்கப்படுமானால், மேலும் அரசாங்கமானது ஒருவர் எதை உண்ண வேண்டும், எதை உடுத்த வேண்டும், எங்கே தங்க வேண்டும், எம்மதத்தை பின்பற்ற வேண்டும், எவரை மணமுடிக்க வேண்டும், பொது இடத்தில் யார் யாரிடம் பேசக்கூடாது, எந்தத் தெருவில் நடக்க வேண்டும், எந்த அளவிற்கு மூச்சு விட வேண்டும் மற்றும் இதுபோன்ற இன்னும் பலவற்றை செய்திட ஆணையிடுமானால், இது எதில் சென்று முடியும்? இது ஜனநாயகத்தையே முற்றிலும் மறுப்பதாகாதா? ஜனநாயகம் இல்லாமல் போனால், அவ்விடத்தல் பாசிசம் வந்துவிடாதா? பின் மனித நாகரிகத்திற்கு என்ன நேரிடும்?

### அப்பட்டமான மதவாத இந்துத்துவா பசுப் பாதுகாப்பு என்ற போர்வையில் வெளிவந்திருக்கின்றது

ஆக, ஆர்எஸ்எஸ்–பாஜகவின் மனிதத்தன்மையற்ற கடுமையான சட்டங்கள் அல்லது ஆணைகளுக்கும் மதத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆளுகின்ற பிற்போக்குவாத முதலாளித்துவத்தின் பணியாட்களான இவர்கள் தங்களின் கொடிய அரசியல் திட்டத்தை நிலைநாட்டிக்கொள்ள மதத்தை பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர். குறுகிய, பிரிவினைவாத, கீழ்த்தர அரசியல் லாபத்திற்காக மதம் பயன்படுத்தப்படுகையில் அல்லது மீறப்படுகையில், அது அடிப்படைவாதம் என அழைக்கப்படுகிறது. இத்தகைய அடிப்படைவாதம் உருவாக்கிய அனைத்து அழுகிப்போன சிந்தனைகள், குப்பைகள் மற்றும் மதவெறியுணர்வு போன்றவற்றை ஆர்எஸ்எஸ்–பாஜகவில் நாம் காணலாம். உண்மை நின்று பேசும். ஆர்எஸ்எஸ்–பாஜகவின் உயர் வரிசையிலிருக்கும் தலைவர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்ட வகையில், மதரீதியில் பதட்டமான சூழலை ஏற்படுத்த வேண்டுமென்றே எரிச்சலூட்டும் சொற்களைப் பேசி, முஸ்லீம் சிறுபான்மையினரிடம் அச்ச உணர்வையும் பாதுகாப்பின்மையையும் அச்சத்தையும் தினசரி வாழ்க்கையில் ஏற்படுவதை உத்தரவாதப்படுத்தி அதன் மூலம் அவர்களை மிரட்டிப் பணியவைத்திட முடியுமென நினைக்கின்றனர். அப்படிப் பணியவைத்துவிட்டால், பின்னர் அதனை அவர்கள் அழைக்கின்ற இந்துத்துவத்திற்கு வெற்றியெனக் கூறி தம்பட்டடித்து இந்து மதவுணர்வை தூண்டிவிட்டு, தேர்தல் வாய்ப்புக்களைப் பிரகாசப்படுத்திக்கொள்வார்கள். ஆர்எஸ்எஸ்–பாஜகவின் இந்த உள்நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள, ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் கட்டளைக்கிணங்க அப்பட்டமான முறையில் சகிப்புத்தன்மை உணர்வினை காலில் போட்டு மிதித்தும், அது தோன்றிய காலத்தில் பொது மக்கள் நலன் மற்றும் நாகரிகத்தின் அங்கமாக எதனை உயர்த்திப்பிடித்ததோ அதனையெல்லாம் புறக்கணித்துவிட்டு வெறியுணர்வையும் பகைமையையும் ஊட்டிவளர்த்துக்கொண்டும் இருக்கிறது. உண்மையில், மதவாதத்தை மேலும் தூண்டிவிடவும் பசுப் பாதுகாப்பு என்ற போர்வையிலிருக்கும் அடிப்படைவாதத்தை ஓர் ஆட்சி பரிபாலன முறையென்று நியாயப்படுத்திடும் வகையில் மிகத்தந்திரமாக இந்த புதிய உத்தரவானது அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் மதபோதகர்கள் பின்பற்றிய மற்றும் நடைமுறைப்படுத்திய இந்து மதத்தில் அரவணைப்பும் பன்முகத்தன்மையும் காணப்பட்டது. இன்றிருக்கின்ற இந்துத்துவவாதிகள் என்றழைக்கப்படுபவர்கள் அவற்றைக் காலில்போட்டு மிதித்து வருகின்றனர். இவ்வுண்மையை எவரும் மறைக்க முடியாது. இதுபோன்ற கொடூர செயல்கள் இன்னும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கையில், ஜனநாயகத்தின் மிச்சசொச்சங்களாக இன்று இருக்கின்றவைகள் கூட இனிமேலும் இருக்கும் எனக்கூற முடியுமா? இந்துத்துவம் என்றழைக்கப்படும் வாதங்களையும் அல்லது பசுப் பாதுகாப்பையும் எப்படிக் கற்பனை செய்து பார்த்தாலும் நாகரிகமான செயலெனக் கருதிட முடியுமா?

### ஏன் இந்தப் பேரழிவை ஏற்படுத்தும் ஆணை?

சாமானிய மக்கள் எங்கு நோக்கினும் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கையில், பட்டினிச் சாவுகள் பெருகிக்கொண்டிருக்கையில், வறுமை அபாயகரமாக அதிகரித்துக் கொண்டிருக்கையில், பரிதாபமிக்க மற்றும் மகிழ்ச்சியற்ற மக்களின் ஓலங்களும் ஒப்பாரிகளும் எங்கெங்கும் ஒலித்துக்கொண்டிருக்கையில், அனைத்து கவனத்தையும் பசுப் பாதுகாப்பை நோக்கி குவியவைத்திட அரசாங்கத்தை எது தூண்டியது என்பதே வெளிப்படையாக எழுகின்ற கேள்வியாகும். ஆய்வு செய்து பார்க்கின்றவர்களின் கண்முன் நிற்பது, இத்தகைய நடவடிக்கையின் பிரதான உள்நோக்கமானது இழிவான அரசியல் நோக்கம் என்பதேயாகும். பொருளாதார அரசியல்–சமூக கலாச்சாரத் துறைகளில் காணப்படும் அனைத்துத் தீமைகளும், ஏற்றத்தாழ்வுகளும், இல்லாமைகளும் மற்றும் பிறழ்ச்சிகளும், சீரழிந்து சாகும் தருவாயிலிருக்கும் முதலாளித்துவத்துடன் பிரிக்கவியலா வண்ணம் தொடர்பு கொண்டுள்ளது என்பதுதான் முதலில் உணரப்படவேண்டிய விஷயம். அனைத்துத் தீமைகளுக்குமான ஆணிவேர் முதலாளித்துவமே. இந்த முதலாளித்துவ அரசின் நடத்துனர் அரசாங்கமே. ஜனநாயகம் என்ற முகத்தோற்றத்தை வைத்துக்கொண்டு, எந்தக் கட்சி அல்லது எக்கட்சிகளின் கூட்டணி ஆட்சியதிகாரத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதையும் அதன் மூலம் ஜாதி, சமயம், மதம், பிராந்தியம் அல்லது இனம் என்ற பாகுபாடின்றி ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்கு எதிரான பெருந்தீமையை விளைவிக்கக்கூடிய தங்களின் நாசகரத் திட்டத்தை செயல்படுத்துவதையும் இத்தகைய ஆளும் முதலாளித்துவவாதிகள்தான் முடிவு செய்கின்றனர். ஒவ்வொரு கணமும், ஆளும் சுரண்டல் முதலாளித்துவத்தின் பூர்ஷ்வா அரசாங்கமும் அதன் எடுபிடிகளும் மக்களை இருளில் வைத்திப்பதற்காக எத்தகைய தந்திரங்களை மேற்கொள்வது, மக்களை ஏமாற்றிட எத்தகைய ஏமாற்று அணுகுமுறைகளைக் கையாள்வது, அவர்களின் குறுக்குவழி சூழ்ச்சிகளை மேற்கொள்ள மக்களின் அறியாமையை எந்த அளவிற்கு தொடர்ந்து வைத்திருந்து அதனை பயன்படுத்திக்கொள்ள முடியும் மற்றும் இத்தகைய தந்திரங்களையும் ஏமாற்று வேலைகளையும் பொருத்தமான வகையில் திட்டமிடப்பட்ட மோசடித் தட்டில் எவ்வாறு பரிமாறுவது என்பதில் மும்முரமாக உள்ளனர். இது ஏன் அவ்வாறு நடைபெறுகின்றது.

ஏனெனில், தவிர்க்கவியலா வரலாற்று விதியினைத் தொடர்ந்து, முதலாளித்துவம் அதன் மரணத்தின் பிடியில் சிக்கித் துடித்துக்கொண்டி

தொடர்ச்சி 7ம் பக்கம்

## மாடுகளைக் கொல்வதற்கு விதிக்கப்பட்ட சமீபத்தியத் தடை

# உண்மைப் பிரச்சினைகளிலிருந்து மக்கள் கவனத்தைத் திசைதிருப்பி மதவாதப் பிளவை ஏற்படுத்தும் சதியை முறியடிப்பீர்

6ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கிறது. அது முற்றிலும் பிற்போக்கானதாக, கொடுமையானதாக, ஊழல் மலிந்ததாக, கொடுங்கோலனாக மாறியதுடன் அதே நேரத்தில் அளவுக்கு மீறிய தந்திரத்துடனும் ஏமாற்றுத்தன்மையுடனும் உள்ளது. முதலாளித்துவம்–ஏகாதிபத்தியமானது சிதைந்துபோன அதன் இருப்பை இன்னும் நீட்டித்துக் கொள்ள பொருளாதாரம்–அரசியல்–சமூகம்–கலாச்சாரம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் ஜனநாயகம் எனும் போர்வையில் பாசிசத்தை கொண்டுவருவதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை. மிகவும் அடிபணிந்து நடக்கின்ற அதன் அரசியல் ஏவலாட்களிடம் பல்வேறு களங்களில் பாசிச விஷப்பற்களை வெளிக்காட்டிடும் கடமையானது இப்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கணமும் ஆளும் முதலாளித்துவமானது மக்களுக்கு உண்மை எப்பொழுதுமே சென்றடையா வண்ணம் நன்கு கவனம் எடுத்துக்கொண்டு, மக்களை ஏமாற்றிடவும் திசைதிருப்பிடவும் பல்வேறு உத்திகளை மேற்கொண்டுவருகிறது. ஏனெனில், ஒளிந்திருக்கும் உண்மை மக்களுக்குத் தெரிய வந்துவிட்டால், இனிமேலும் அவர்கள் தங்களை ஏமாற்றிட அனுமதிக்காமல் இந்த கடுமையான முதலாளித்துவ அடக்குமுறையிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை வேண்டி நின்றிடுவார்கள். வரலாற்று ரீதியில் தீர்மானிக்கப்பட்ட விடுதலைக்கான பாதையானது, அறிவியல் ரீதியில் வரையறுக்கப்பட்ட அகவயப்பட்ட மற்றும் புறவயப்பட்ட சூழ்நிலைமைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதுதான். எனவே, மாபெரும் மார்க்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, ஆளுகின்ற ஏகபோகங்கள் எதிர்வரும் முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சியின் காட்சிகளை கண்டு கிலி பிடித்துப் போயிருக்கின்றனர். நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து புரட்சியை வென்றெடுப்பதென்பது, சமூக முன்னேற்றத்தின் இத்தகைய வரலாற்று ரீதியிலான பாதையை மக்கள் உணர்ந்து புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுவதிலும்தான் அடங்கியிருக்கின்றது. எனவே, ஆளும் வர்க்கமானது மக்களின் எண்ணத்தையும் சிந்தனையையும் மழுங்கடித்திட அதன் ஒட்டுமொத்த படைக்கலத்தையும் அணிவகுத்து நிறுத்தியுள்ளது. தங்களின் பெருகிவரும் துன்பங்களுக்கான காரணத்தை அறிவதிலிருந்தும் மற்றும் சேர்த்துவைக்கப்பட்ட மனக்குறைகள் யாவும் அமைப்பு ரீதியிலான விடாப்பிடியான சக்திவாய்ந்த, விரும்பிய புரட்சியை கொண்டுவருவதற்கான சரியான புரட்சிகரத் தலைமையின் கீழான இயக்கங்களாக உருப்பெறுவதை தடுத்திடவேண்டி, அவர்களை சிந்தனை முறைப்படுத்தி (Regimentation of thoughts), செயல்பாடற்றவர்களாக்கி, முடமாக்கி இருட்டறைக்குள் தள்ளியிருக்கிறது.

### சக்திவாய்ந்த ஜனநாயக இயக்கம் இல்லாமை மதவாதம்–அடிப்படைவாதம் வளர்வதற்கான வளமான மண்ணாக இந்தியாவை மாற்றியுள்ளது

இந்தியாவில், இருக்கின்ற நிச்சயமான சமூக வரலாற்றுக் காரணங்களால், எங்களது தலைவரும் ஆசானும், வழிகாட்டியும் இச்சகாப்தத்தின் முன்னணி மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், நிலப்பிரபுத்துவ சிந்தனைகள், நிலப்பிரபுத்துவ ஒற்றுமையின்மை மற்றும் மதக்கட்டுத்தளைகள் ஆகியவற்றை எதிர்த்து சமூகத்தை ஜனநாயகப்படுத்தும் கடமையை விடுதலை இயக்கத்தின்போது இருந்த இந்திய தேசியத் தலைமையானது நேர்மையாக மேற்கொள்ளவில்லை என்பதை முழுமையாக விரித்துரைத்திருக்கிறார். ஆக, இந்தியாவானது அரசியல் ரீதியில் ஒரு தேசமாக உருவாகியிருந்தாலும், இந்தியர்கள் மதம், ஜாதி, தேசியம், இனம் மற்றும் மொழி வாரியாக ஒற்றுமையின்றி அப்படியேதான் இருந்தனர். இந்த உள்ளார்ந்த பலவீனம் இருந்தபோதிலும், தேசிய சுதந்திரப் போராட்டத்தின் போக்கில் எந்த அளவிற்கு குறைந்த அளவிலான ஜனநாயகமும் ஜனநாயக மதிப்புகளும் வளர்ந்திட முடிந்ததோ அதுவும்கூட இன்று பிரதான மதவாத ஆர்எஸ்எஸ்–பாஜகவினால் கடும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது. விடுதலை இயக்கத்தின் பலவீனமாக சுதந்திர இந்தியாவில் தொடர்ந்துவரும் ஜாதி, மதம், பிராந்தியம் மற்றும் மொழியை மையமாக வைத்த பிரிவினைவாதம் பாடுபடும் இந்தியர்கள் மத்தியில் ஒற்றுமையின்மையை நீட்டித்து வைத்திருக்கவும், அவர்களின் ஒற்றுமையை குலைத்திடவும், அவர்களின் சகோதரத்துவத்தை கலைத்திடவும், அவர்கள் மத்தியில் பிரியமின்மை, அவநம்பிக்கை மற்றும் விரோதத்தை அதிகமாக்கிடவும் மற்றும் பாடுபடும் மக்களின் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினருக்கு எதிராக நிரந்தரமாக மோத விட்டு அதன் மூலம் சகோதரத்துவ ரத்தக்களரியில் ஈடுபட வைப்பதற்கும் ஒருவருக்கொருவர் கொலைகள் புரிந்திட வைப்பதற்கும் அவர்களுக்கு சாதகமாக ஆகிவிட்டது.

மக்கள் மீதான அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் மென்மேலும் அதிகரிக்கையில், ஒடுக்கப்பட்ட மக்களை மத ரீதியில் பிளவுபடுத்தி, ஒற்றுமையின்மையை ஏற்படுத்தி மற்றும் துருவமயப்படுத்தி, மக்களின் எண்ணங்களில் மதவெறிவாதத்தையும் மதவெறியையும் வளர்த்தெடுத்து, பழமைவாதத்தைத் தூண்டிவிட்டு பழங்கால காலாவதியாகிப்போன மதக்கோட்பாடுகளை தக்கவைத்திருப்பது, இந்து சமுதாய மக்களிடம் சிறுபான்மை முஸ்லீம் மக்கள் மீதான வெறுப்பை ஏற்படுத்துவது, அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பது, மதவுணர்வை தூண்டிவிடுவது, அறிவியல் பூர்வ சிந்தனையையும் பகுத்தறிவு அணுகுமுறையையும் அழித்தொழிப்பது, சிந்தனை செயல்முறைப்போக்கை மழுங்கடித்து கண்ணுக்குப்புலப்படாத குருட்டுத்தனம் மற்றும் பழமைவாத பாதையில் செல்லும் மனப்போக்காக மாற்றி ஆளும் முதலாளித்துவத்தின் கொடிய வர்க்க நலனுக்கு சேவை செய்திட மதவாத–அடிப்படைவாத ஆர்எஸ்எஸ்–பாஜகவானது, மென்மேலும் அத்தகைய உணர்வுகளையும் வெறியுணர்ச்சியையும் தூண்டுவிடுகின்றன. அவர்களின் வர்க்க இயல்புணர்ச்சியிலிருந்து, மதவாத–அடிப்படைவாத வெறியுணர்வு மற்றும் மதவாத விஷத்தைக் கொண்டு மக்களது மனதில் நஞ்சினைப் புகுத்துவதும், பழமைவாதம்–மதவெறியைவிட வேறெதுவும் ஆளும் வர்க்க நலனுக்கு சேவை புரியாது என்பதைப் உணர்ந்துகொண்டு ஆளும் முதலாளித்துவவாதிகள் ஒன்றுகூடிப்பேசி முயற்சித்து பாஜகவை ஆட்சியில் அமர்த்திட, அதன் தலைவர் நரேந்திர மோடியை ஓர் திறமைவாய்ந்த அரசியல் மேதையாக முன்னிறுத்தி, இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு ஒவ்வாதிருக்கின்ற வெறிபிடித்த இந்துத்துவ கோட்பாடுகளை முழுமனதாக ஆதரித்தனர். சமீபத்திய பசுப் பாதுப்பு என்பதிலான அவர்களின் மிகையான செயல்பாடு மற்றும் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதை சட்டபூர்வமாக தடைசெய்திருப்பதை இப்பின்னணியில் பார்க்க வேண்டும்.

### கவனத்தைத் திசைதிருப்பி மக்களைப் பிளவுபடுத்தும் தந்திரம்

நாங்கள் கூறியது போல், சீரழிந்து சாகும் தருவாயிலிருக்கும் முதலாளித்துவத்தின் மிகவும் கீழ்ப்படிந்துள்ள அரசியல் ஏவலாட்களுக்கு பல்வேறு களங்களில் பாசிச விஷப்பற்களைக் காட்டிடும் கடமையானது இப்போது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பாஜகவும்கூட அத்தகைய பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. ஆட்சியதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் பாஜக கட்சியானது பிற அழுகிப்போன பூர்ஷ்வா கட்சிகளைப்போன்றே அச்சாதின் (நல்ல நாட்கள்), சாப்கே சத், சாப்கே விகாஸ் (ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் செழுமை) மற்றும் இன்னும் பல கவர்ச்சிகர சொற்றொடர்களைப்பேசி மக்களை மயக்கிட முயன்றதானது. நாட்கள் செல்லச்செல்ல இவைகள் யாவும் நனைந்து போன பட்டாசுகள் என்பது நிரூபணமானது. பல்வேறு வடிவத்திலான பொருளாதாரத் தாக்குதல்கள் பாடுபடும் மக்களை பிணைக்கைதிகளாகக் கட்டிப்போட்டிருக்கிறது.

அடிக்கடி நடைபெறும் தில்லுமுல்லு செயல்பாடுகள், புள்ளி விபர புரட்டுகள், ஸ்டண்டுகள் மற்றும் ஏமாற்று வித்தைகள் இருந்தபோதிலும், பொருளாதாரத்தின் ஆட்டம் காணுகின்ற முகமானது கொடுமையான தன்மையுடன் மேலெழுந்து வந்துகொண்டிருக்கிறது. இதுபோன்ற அனைத்து வாக்குறுதிகளும் அரசாங்கம், அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சித் தலைவர்கள் சரிக்கட்டி சமாளித்துப்பேசுவதும் எத்தகைய பொய்மை என்பதை அவர்களின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து மக்கள் மெல்லமெல்லப் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். பாடுபடும் மக்களிடையே அதிருப்தியானது வெடித்துக் கிளம்பிக்கொண்டிருக்கிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிளர்ச்சி மற்றும் போராட்டம் என்ற வடிவில் அது வெளிப்பட்டு எழுந்து வருகிறது. அதிகரித்துவரும் அதிருப்தி மற்றும் மனக்குறைகள் யாவும் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிக்கு வழிவகுக்கும் சரியான தலைமையின் கீழான, அமைப்பு ரீதியிலான, உணர்வுபெற்ற வெகுஜனப் போராட்டங்களாக உருவெடுப்பதை ஆளும் வர்க்கமும் அதன் அரசாங்கமும் அனுமதித்திட விரும்பாது. ஆதலால், ஆளும் வர்க்கத்தின் மிகவும் நம்பிக்கைக்குரிய கட்சியான பாஜகவுக்கு இத்தருணத்தில் அதன் எஜமானரின் தேவை என்னவென்பது மிகத் தெளிவாகத் தெரியும். எனவே, அதன் வெறிகொண்ட மதவாதத் திட்டத்துடன் முழு வேகத்தில் சென்றுகொண்டு, சிறுபான்மை மதத்தினர்களுக்கு எதிரான ஒரு வெறுப்புப் பிரச்சாரத்தைத் திட்டமிட்டு நடத்திக்கொண்டும், மக்களின் ஒற்றுமையை அழித்தும், பொது நலனை காண்பதிலிருந்து அவர்களை விலகச் செய்தும் அவர்களின் கவனத்தை திசைதிருப்பியும் வருகிறது.

### பெருங்கேடு விளைவிக்கும் இத்தகைய செயலை முறியடித்து இந்த பயங்கர சதித்திட்டத்தை அம்பலப்படுத்துங்கள்

சுருங்கக்கூறினால், பசுப்பாதுகாப்பு பற்றிய உரத்த குரலின் மற்றும் பசுவின் புகழ்பாடுதலின் பின்னணி மேற்கூறியவைதானாகும். பிற்போக்குவாத வியாபாரிகளின் இந்த நாராசமான இசைக்கு துன்பப்படும் மக்கள் நிச்சயம் இரையாகிவிடக்கூடாது. சூழ்நிலைமையானது பொங்கிக்கொண்டிருக்கையில் மற்றும் மதவாத விஷப்பாம்புகள் சமுதாயத்தின் மீது நஞ்சை உமிழ்ந்திட அவற்றின் தலையை உயர்த்திக் கொண்டிருக்கையில், ஆளும் முதலாளித்துவவாதிகளின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்துகொண்டு, ஆட்சியதிகாரத்தில் அமர்வதற்காக ஏங்கிக்கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகள் எதுவும் தங்களின் பலத்தை பிரயோகித்து இந்த பெருந்தீமை பயக்கக்கூடிய நடவடிக்கையை எதிர்த்திட முயற்சிக்கவில்லை. அவர்களது மெல்லிய எதிர்ப்புக்குரல் அல்லது சம்பிரதாய முறைப்படி ஊடகங்களில் வீரதீரமாகப் பேசுவது என்பது அவர்களுக்கு தீனிபோடும் வாக்கு அரசியலுக்காக மட்டுமேயாகும்.

இதன் காரணமாக, துன்பத்திலிருக்கும் நாட்டு மக்கள் தங்களின் வாழ்வில் எத்தகைய பேராபத்து வரப்போகிறது என்பதை சரியாக உணர்ந்து கொள்வது தேவைப்படுகிறது. அவர்கள் மௌனமாக இருப்பார்களேயானால், மதவாத–அடிப்படைவாத சக்திகளின் மரண ஆட்டம் வெறிகொண்டு அவர்களை சின்னாபின்னமாக்கிவிடும். இதனைத் தடுத்து நிறுத்திடும் ஒரே ஆற்றல் அனைத்து பிரிவினைவாதத்தையும் உதறித்தள்ளிவிட்டு அவர்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்தி வரவிருக்கும் ஆபத்தை தடுத்திட சரியான புரட்சிகரத் தலைமையின் கீழான ஒரு சக்திவாய்ந்த போராட்டத்தை கட்டவிழ்த்துவிடுவதில்தான் உள்ளது. அத்துடன், அங்கே கொடிய மதவாதம்–குருட்டுத்தனம்–வெறிவாதம்–சமயவாத புத்தெழுச்சியை எதிர்த்த, தர்க்கரீதியான சிந்தனையை மழுங்கடிப்பதற்கும் இட்டுக்கட்டப்பட்ட பாடல்களுக்கும் செய்யுள்களுக்கும் மத நூல்களையும் இதிகாசங்களையும் போலியாக, மோசடியாக மேற்கோள்கள் காட்டிடுவதையும் உண்மைகளையும் வரலாற்றையும் திரித்துக்கூறுவதையும் எதிர்த்த, தீவிர சித்தாந்தப் போராட்டம் நடந்திட வேண்டும். பசு வெட்டப்படுவதை தடை செய்கிறோம் என்ற பெயரில் ஒட்டுமொத்த தேசத்தையும் இறைச்சிக்கூடமாக மாற்றிடும் இத்தகைய மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிபவர்களை எவ்விதக் காயமுமின்றி தப்பிக்க விடாமல் அவர்களை அம்பலப்படுத்திட வேண்டும். வரலாற்றின் தீர்ப்பை உதாசீனம் செய்யத் துணிபவர்களின் மரணக் குழியை சரித்திரம் நிச்சயம் தோண்டும். மக்களின் எஃகு போன்ற மனமும் உறுதிப்பாடும்தான் இப்போது தேவைப்படுகிறது ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

புரட்சி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# மத்திய, மாநில அரசாங்கங்களை கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் இயக்கங்கள்






சென்னையில் ஜூன் 12, 2017 அன்று பேரணி

மதுரையில் ஜூன் 12, 2017 அன்று தர்ணா

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமும், அனைவருக்கும் குடிநீரும், ரேஷனில் அனைத்துப் பொருட்களும் அனைவருக்கும் வழங்கவும், மதுக்கடைகளை மூடவும் கோரி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தலைமையில் நடைபெற்ற மக்கள் இயக்கங்கள்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# ஜார் ஆட்சியை யுத்தம் வலுவிழக்கச் செய்தது, பிப்ரவரி புரட்சி அதனைத் தூக்கியெறிந்தது

5ம் பக்கத் தொடர்ச்சி

வேலை நிறுத்தத்தால் மூடப்பட்டன. பிப்ரவரி 23ஆம் நாள், (புதிய நாட்காட்டியின் பிரகாரம் அது மார்ச் 8ம் நாள்) சர்வதேசிய பெண்கள் தினத்தன்று பெண் தொழிலாளர்கள் பட்டினி, போர் மற்றும் ஜார் ஆட்சிக்கெதிராக தெருக்களில் இறங்கிப் போராடினர். பெட்ரோகிராட் தொழிலாளர்களும் கூட, அம்மகளிர் போராட்டத்திற்கு தங்களின் ஆதரவினை நல்கினர். அடுத்த நாள், பிப்ரவரி 24 அன்று வேலை நிறுத்தமானது மேலும் விரிவடைந்து அதில் கிட்டத்தட்ட 2 லட்சம் தொழிலாளர்கள் இணைந்தனர்.

பிப்ரவரி 25ஆம் நாளன்று, பெட்ரோகிராட்–ன் அனைத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் நகரம் முழுவதுமே ஸ்தம்பித்துப் போனது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ஜாரின் போலீசுக்குமிடையே எங்கு பார்த்தாலும் மோதல்கள் வெடித்தன. ‘ஜார் ஆட்சி ஒழிக’, ‘போரை நிறுத்திடு’, ‘எங்களுக்கு உணவு வேண்டும்’ எனும் முழக்கங்களுடன் கூடிய செங்கொடிகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டு தொழிலாளர்கள் ஒன்றுகூடி சாலைகளில் குவிந்தனர்.

பிப்ரவரி 26ஆம் நாள் காலையில், ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங்களும் வெகுஜன கிளர்ச்சிகளாக உருமாறின. போலீஸ் மற்றும் ராணுவ வீரர்களிடமிருந்து ஆயுதங்களை பறித்துக் கொண்டு, தொழிலாளர்கள் தாங்களாகவே ஆயுதம் தரித்துக்கொண்டனர். ஸிநாமென்ஸ்கயா சதுக்கத்தில் தொழிலாளர்கள் ஊர்வலத்தில் போலீஸ் துப்பாக்கி சூடு நடத்தியது. ஜார் தளபதி இத்தகைய கிளர்ச்சியை நசுக்கிட அனைத்து வழிகளிலும் முயற்சித்தார், ஆனால் அது தோல்வியுற்றது. அதே நாள், ஜார் அரசாங்கத்தின் பாவ்லோஸ்க்கி படைப்பிரிவின் 4ஆம் கம்பெனி ஜாரின் குதிரைப்படைப் பிரிவின் மீது திருப்பித்தாக்கியது. போலீஸையும் படைவீரர்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பக்கம் சேர்த்திட, இவ்விஷயத்தில் பெண் தொழிலாளர்களின் முக்கியப் பங்காற்றலுடன் தீவிர முயற்சிகள் துவக்கப்பட்டன. ஜார் ஆட்சியின் கீழான இதயமற்ற கடும் துயரங்களை ராணுவத்தினரிடமும் போலீசிடமும் விவரித்து, ஜார் ஆட்சியினை தூக்கியெறிந்திட உதவி செய்திடுமாறு அவர்களிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்தனர். அதே நாள் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் கமிட்டியானது ஆயுதம் தாங்கிய போராட்டத்தைத் தொடர்ந்திட வேண்டுமென்ற அறைகூவலை ஒரு அறிக்கையில் வெளியிட்டது, அதே நேரத்தில் ஒரு தற்காலிக புரட்சிகர அரசாங்கம் அமைத்திருப்பதையும் அறிவித்தது.

அடுத்த நாள் பிப்ரவரி 27யில் பெட்ரோகிராட்யில் ராணுவ வீரர்கள் தொழிலாளர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்திட மறுத்துவிட்டனர். அதிருப்தி கொண்ட ராணுவ வீரர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் புரட்சியாளர்களுடன் இணைந்தனர். காலையில் 10,000 மாக இருந்த அவர்களின் எண்ணிக்கை மாலையில் 60,000 என அதிகரித்தது.

பின்னர் புரட்சிகரத் தொழிலாளர்களும் ராணுவ வீரர்களும் ஜாரின் அமைச்சர்களையும் தளபதிகளையும் கைது செய்யத் துவங்கினர், அதே நேரத்தில் சிறையிலடைக்கப்பட்டிருந்த புரட்சியாளர்களையும் விடுவித்தனர். விடுவிக்கப்பட்டவுடனேயே அரசியல் கைதிகள் யாவரும் புரட்சிகர யுத்தத்தில் இணைந்தனர். தெருக்களில் நடந்த துப்பாக்கிச் சண்டைகள் சில நேரம் தொடர்ந்து நீடித்து, விரைவாகவே ஜாரின் படைகள் தொழிலாளர்களின் பக்கம் சேர்ந்துகொண்டதால் ஜார் ஆட்சியின் வீழ்ச்சி தவிர்க்கவியலாததாக ஆக்கப்பட்டது.

பெட்ரோகிராட்–ல் புரட்சியாளர்களின் வெற்றிச் செய்தி இரஷ்யாவின் பிற நகரங்களுக்கும் போர் முனைக்கும் பரவத்துவங்கியவுடன் தொழிலாளர்களும் ராணுவ வீரர்களும் எல்லா இடங்களிலும் ஜாரின் செயல்வீரர்களை பதவியிறக்கிடத் துவங்கினர். இவ்வாறாக, பிப்ரவரி மாதத்தில் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் வெற்றி அடையப்பெற்றது; இவ்வாறாகத்தான் ஜார் ஆட்சி வேரறுக்கப்பட்டது.

இங்கே தொழிலாளர்கள், புரட்சிகர முன்னணிப் படையில் அடங்கியிருந்ததினால், பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியானது வெற்றிகண்டது. ராணுவ வீரர்கள் போல் உடைதரித்து, ‘அமைதி’, ‘உணவு’ மற்றும் ‘விடுதலை’ எனும் கோரிக்கைகளுடன் அவர்கள் கோடிக்கணக்கான விவசாயிகளின் புரட்சியை வழிநடத்தினர். புரட்சியின் இத்தகைய துவக்க நாட்களில், “புரட்சியானது பாட்டாளி வர்க்கத்தினால் நடத்தப்பட்டது. பாட்டாளி வர்க்கம் தன் வீரத்தை வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றது, அது தன் உதிரத்தைச் சிந்தியிருக்கின்றது; அது அதனுடன் பாடுபடும் மற்றும் ஏழை மக்கள் தொகையின் பரந்துபட்ட வெகுஜனங்களை வென்றெடுத்துள்ளது” என லெனின் எழுதினார். (தொகுப்பு நூல், தொகுதி 20, பக்கங்கள் 23–4) ■

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் . . .)

## மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா

7 நவம்பர், 2016 – 17 நவம்பர், 2017

SUCI (COMMUNIST)



சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, தூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, தூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்
Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org